

கானகத்தில்
கண்ணாமூச்சி!
ரூ. 2-50


கானகத்தில் கண்ணாமூச்சி!
மெக்ஸிகோவில் உள்ள குடலாஜாராவில் ஒரு கேளிக்கை விடுதியில்—
சரஸமாடுவதில் பலே பேர்வழி என்றீர்கள்...எப்படி தூங்கி வழிகிறார் பாருங்கள்!
ஊஹூம்... இவரை திருத்தவே முடியாது!
பின்னர், இனிய காட்சிகள் நிறைந்த பூங்கா ஒன்றில்—
உங்களுக்கு உல்லாசமான ஓய்வு தேவை என்று மாடஸ்டி சொன்னாளே என்று குடலாஜாராவுக்கு கூட்டிவந்தேன்...
துணைக்கு ஒரு சூட்டிகையான பெண்ணையும் ஏற்பாடு செய்தேன்!
3


நீங்களானுல்...சிவனே என்று தூங்கி வழிகிறீர்கள்.
மது,மாது...இசை எல்லாமே அலுத்துவிட்டது எனக்கு- வயதாகிவிட்டது பார்!
ஸாரி வில்லி...இதற்குப் பதிலாக மீன் பிடிக்க ஸ்காட்லாண்டுக்கு போயிருக்கலாம்!
இப்படி தொய்ந்து போன நிலையில் திரும்ப அழைத்துச் சென்றேன் என்ருல் இளவரசி என்னை காய்ச்சி விடுவாள்- போன் பண்ணி யோசனை கேட்கப் போகிறேன்.
ஐயாயிரம் மைல்களுக்கு அப்பால்— சின்னஞ்சிறு தென்னமெரிக்க குடியரசு நாடான கௌரேம்போவில்...
மேடம் சொல்கிறதை கொண்டு வாப்பா!
மாடஸ்டியோடு இருக்கும் நபர்-ஷெர்ரா...பல பந்தயக் குதிரைகளின் சொந்தக்காரர்...கடல் ஆராய்ச்சியாளர்!
என் எதிரி வில்லி கார்வின் எங்கே இருக்கிருன்?
மெக்ஸிகோவில்..
ஆனல் உங்கள் எதிரிகளின் பட்டியலில் வில்லி கிடையாது!
பட்டியலா? கெடுத்தாயே! பொருமைத் தீயில் நான் வெந்து துடிப்பதை காண்பது உனக்கு ஒரு வேடிக்கையா?


போச்சு...சனி நம்மை தேடி வருகிறது... தொலைந்தோம்—
டயானு... இவள்-என் தோழி... மாடஸ்டி பிளைஸி. இவளும் உன் நாட்டவள்தான்!
மாடஸ்டி...இவள்-டயானு -எங்கள் நாட்டு பிரிட்டிஷ் தூதர் ஸர் நார்மனின் செல்வப் புதல்வி!
நடத்தை கெட்ட கழிசடையே! என் நண்பர்களை வலைவீசி மயக்க வந்தாயோ-இங்கே?
...ம்ம்-உனக்கு போதை தெளிந்த பின் இதை விவாதிப்போமே?
குடிகாரி என்று சொல்கிருய் என்னை...,உனக்கு என்ன திமிர்!
உண்மை கசக்கும்தான்!
டயானு,ப்ளீஸ்-போய்விடு இங்கிருந்து!
கேட்டாயா...இந்த அநியாயத்தை? போய்த் தொலை என்கிருர் என் பாய் பிரண்ட்...?


நீங்கள் இவளுடைய பாய் பிரண்டா...?
பழைய கதை...விட்டு விலகி ஆறுமாதங்களுக்கு மேலாகிவிட்டது!
எல்லோருக்கும் கேட்கிற மாதிரி கத்தப் போகிறேன்...இவள் ஒரு கிறுக்கி...நீங்கள் ஒரு—
டயானாவும் நானும் அப்படிச் சென்று மனம் விட்டு பேசுவதில் உங்களுக்கு ஆட்சேபணையில்லையே... ஷெர்ரா?
ஹே...நில்லுடி...உன் கிட்டே சில சமாசாரம் சொல்லணும்!
மேடம் போயாச்சா ஸார்?
தெரியலே...!
நான் சொல்றதை கவனமாக கேட்டுக்கொள் சைத்தானே...!
ஊஹூம் சத்தம் போடக் கூடாது!


என்ன ஸார்... சப்தம்-அங்கே...?
ஹே...டயானு? என்ன விவகாரம் இங்கே?
ம்ம்...டயானு நீச்சல் குளத்தினுள் விழுந்திட்டுது என்று நினைக்கிறேன்!
அவள் எ-என்னை தள்ளி விட்டுட்டா... விடாதீர்கள்-அரெஸ்ட் செய்யுங்கள்!
தள்ளிவிட்டது நீங்களா? கங்கிராஜுலேஷன்ஸ்!
நான் அவளுடைய அப்பா...!நான் செய்திருக்க வேண்டியதை நீங்கள் செய்து விட்டீர்கள்! தேங்க்ஸ்!
ஷெர்ராவின் வீட்டில்—
தறிகெட்டு வளர்ந்த பெண்-டயானு!பொறுமையின் மொத்த உருவம்...!
பொறுப்பேஇல்லாத பெண்!


டயானுவை குளத்தினுள் நீ தள்ளிவிட்டது அட்டகாசமாய இருந்தது! ஆனுல்-அவள் புகார் கொடுக்காமலிருக்க வேண்டும்!
பிரச்சனை வராது! அவளுடைய அப்பா விஷயத்தை பொருட்படுத்தவேயில்லை
இந்த விஷயத்திற்கெல்லாம் ஒரு புகாரை பதிவு செய்ய முடிகிறதென்ருல்,சட்ட ஒழுங்கு பராமரிப்பில் கௌரேம்போ ரொம்பவும்தான் முன்னேறி விட்டது என்று அர்த்தம்!
ஆமாம்...போலீஸ் அதிகாரியாக இருந்த மச்சாடோ அதிகாரத்தை கைப்பற்றி தன்னை ஜனுதிபதியாக பிரகடனப் படுத்திக் கொண்டது முதல் நிலவரம் எவ்வளவோ திருந்திவிட்டது...
கேள்விப்பட்டேன்...!
விடிகாலைப் பொழுதில்—
யாரங்கே... வந்திருக்கிறது?
இரண்டு போலீஸ்காரர்கள்... மேடத்தை தேடி வந்திருக்கிருர்கள்!
போலீஸா...? -என்னைத் தேடியா?
அப்படிததான தோன்றுகிறது சுத்த அபத்தம்!
உன்னை கையோடு அழைத்து வரவேண்டும் என்று உத்தரவாம்... என்னுடைய வக்கீல் ஆபீஸுக்கு வந்ததும் ஒரு கலக்கு கலக்கச் செய்கிறேன்!


விஷயம்... நீங்கள் நினைக்கிற மாதிரி அவ்வளவு மோசமாக இராது!
காரில் ஏறுங்கள் மேடம்... லக்கேஜ் எதுவும் தேவைப்படாது உங்களுக்கு!
என்னடா சொன்னுய்?
கலாட்டா பண்ணுதீங்க ஷெர்ரா...!
கார் நகரத் தொடங்கியது-
என்னை எங்கே கொண்டு போகிறீர்கள்?
இதுபற்றி உங்களிடம் பேச எங்களுக்கு அனுமதியில்லே மேடம்!
ஐந்து மைல் பயண முடிவில்—
ஏதோ ஒரு பெரிய இடத்தின் பின்புற வாசல் மாதிரி தோன்றுகிறது!
இப்படி... வாருங்கள்- மேடம்!
காலி ஜெயில்கள்... மயான அமைதி...! விஷயம் சரியாகப் படவில்லே!


அந்தப் பெண்ணை குளத்தினுள் தள்ளிவிட்ட காரணத்திற்காக இங்கே நான் அழைத்து வரப்படவில்லை என்று மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது!
உள்ளே ...போங்கள்!
விசாரணை அறையோ?என்னைப் பற்றிய பழைய தகவல்கள் ஏதாவது கிடைத்திருக்குமோ?
கதவின் பின்னால்-அனைத்து வசதிகளும் கொண்ட விசாலமான அறை தென்பட்டது—
பிரபு!நீங்கள் சந்திக்க விரும்பிய மேடம்!
குட்மார்னிங், மாடஸ்டி!காலை டிபனுக்கு சரியாக வந்து சேர்ந்துவிட்டாய்!
குட்மார்னிங் பிரஸிடெண்ட்...! உங்களுடைய குறும்புத்தனம் கொஞ்சமும் குறையக் காணோம்'என்பது மட்டும் புரிகிறது!
இந்தப் பழைய நண்பனை பார்க்க நீயாக வரவில்லையென்பதால் அழைத்து வருமாறு உத்தரவிட்டேன்!
அவர்-கௌரேம்போவின் ஜனாதிபதி மச்சாடோ...!
அதற்காக-போலீஸாரையா' அனுப்புவது?
என்னுடைய ஜோக் உன்னிடம் பலிக்கவில்லை போலிருக்கிறதே!
ஷெர்ரா ரொம்பக் கலவரமடைந்து விட்டார்...!


யாராவது அவருக்கு உண்மையை சொல்லிவிட்டால் நல்லது-ப்ளீஸ்!
இன்ஸ்பெக்டர்... அதற்கு உடனே ஏற்பாடு செய்யுங்கள்!
நான்கு வருடங்களுக்கு முன் ஒரு ரௌடிக் கும்பலுக்குத் தலைவியாக இருந்தாய்.
அப்போது நீங்கள் இங்கே போலீஸ் தலைமையதிகாரி! நான் உங்களுக்கு இலஞ்சம் கொடுத்து வளைக்க முயன்றேன்..
ஆனால் நீங்கள் ஒரு நேர்மையான அதிகாரி என்று கண்டு கொண்டேன்.
உன் செயல்கள் சட்டவிரோதமானவை எனினும் நோக்கம் நேர்மையானது என்று நான் தெரிந்து கொண்டேன்.
நம்மிடையே நட்பு துளிர்த்தது.
இப்போது இருவருமே தொழிலை விட்டுவிட்டோம்-நீங்கள் ஜனாதிபதியாகிவிட்டீர்கள்!
சீர்கெட்டுக் கிடக்கும் இந்த நாட்டை செழிப்படையச் செய்யா விட்டாலும்கூட, சாக்கடையாக மாறாமல் தடுக்க நினைத்தேன்!
சுவாரஸ்யமான அனுபவம்தான்! இல்லையா?
நோ...இதைவிட, மீன் பிடிப்பதில் பொழுதைக் கழிப்பது சுகமானதாக இருக்கக்கூடும்!
லஞ்ச ஊழல்களையும், நியாயமற்ற சலுகைகளையும் ஒழிக்க நாம் முயற்சிக்கும் போது சில எதிர்ப்பு சக்திகள் களையாக முளைத்துவிடுகின்றன.
நேர்மையான போலீஸ் அதிகாரியாக இருப்பதைவிட நல்ல ஜனாதிபதியாக இருப்பது கஷ்டமான காரியம் என்று தோன்றுகிறது!


எந்த நாட்டிலும் இது சகஜம்தான்!
பல நூற்றாண்டுகளாக அடிமைகளாகக் கிடந்து இன்று ஆக்ரோஷமாக பொங்கி எழும் ஜனங்களுக்கு ஜனநாயகக் குடியரசை அறிமுகப்படுத்துவது சுலபமான காரியமல்ல.
இருந்தாலும் இந்த கோஷ்டி ஏகப்பட்ட சலசலப்பை ஏற்படுத்தி வருகின்றது... அடக்குமுறை ஒழிக என்று கோஷமிட்டு வன்முறையை தூண்டுகின்றது. அவர்களுடைய உள் நோக்கம்- பதவியை பிடிப்பது!
நான் அதிகாரத்தை கைப்பற்றியது திரும்பவும் ஒரு வன்முறை கும்பலிடம் நாட்டை ஒப்படைத்துச் செல்ல அல்ல!
கௌரேம்போவிலிருந்து நீ கிளம்பு முன் மீண்டும் ஒருமுறை நாம் சந்தித்தால் நன்றாக இருக்கும் மாடஸ்டி!
உங்களுக்கு வசதிப்பட்ட போது தகவல் கொடுங்கள்... மிஸ்டர் பிரஸிடெண்ட்!
உங்களுடைய முயற்சிகள் வெற்றிபெற என் வாழ்த்துக்கள்.
தேங்க்ஸ்!


ஷெர்ராவின் மாளிகையில்—
வாசலிலேயே என்னை நிறுத்தி வைக்கும்படி வேலைக்காரர்களிடம் சொல்ல என்ன தைரியம் உங்களுக்கு?
வீட்டிற்குள்ளே வந்து ரகளை பண்ண அனுமதிப்பேன் என்று நினைத்தாயா?
மாடஸ்டி போலீஸ் வேனில் வந்து இறங்கினாள்...
என் நட்பை புதுப்பித்துக் கொள்ள உங்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கொடுக்க வந்தேன்... ஆனால் உங்கள் புத்தி மாறவேயில்லை!
அடக்கடவுளே வந்துவிட்டாளா?
ஓ...போலீஸா-ஒரு புகார் கொடுக்கிறேன்... எழுதிக் கொள்ளுங்கள்- நேற்றிரவு இந்தப் பெண் என்னைத் தாக்கினாள்.
ஐம்பது கஜ தொலைவில்- சாலையிலிருந்து விலகி...
போலீஸ் இடைஞ்சலாக வந்துவிட்டிருக்கிறது.
தாமதித்தால் அனைத்தும் கெட்டுவிடும்... இப்போதே புகுந்து விடவேண்டியதுதான்!
சாலையில் விரைந்து சட்டென கிறீச்சிட்டு நின்றது அந்தக் கார்!
யாரும் அசையக் கூடாது!
அவர்களை கவனித்துக் கொள்- ஜோர்ஜ்!
டயானாவின் முகத்தை மயக்க மருந்து தெளிக்கப்பட்ட கைக்குட்டை தழுவியது.


துப்பாக்கியை எடுக்க முற்பட்ட இன்ஸ்பெக்டரை தோட்டா ஒன்று செயலிழக்கச் செய்தது. மாடஸ்டி மறைவிடத்தை நோக்கி பாய்ந்தாள்.
சுற்றுச் சுவரின் பின்னால் பாதுகாப்பு தேடிக் கொண்டபின்-
அவர்களுடைய கார் நகரும் போது சுவர் மீதிருந்து அதன் மேல் குதித்து விடவேண்டும்.
நகனறீர்களோ... திரும்பவும் "டுமீல்" தான்!
இரத்த நாளத்தில் தோட்டா பாய்ந்திருப்பதால் இரத்தம் கொட்டுகிறது! அதை உடனே நிறுத்தாவிடில் செத்துப் போவார்
என்னையும் சுடுவதாகயிருந்தால் ஒழி!
நாம் கிளம்புவோம்!
கார் கிளம்பியது-டயானுவோடு!
கார் வேகம் பெறும்வரை அவர்கள் மீது ஒரு கண் வைத்திரு ஜோர்ஜ்!
ரைட்!
சுற்றுச் சுவர் மீது—
இந்த இடத்தை வந்தடையும் போது கார் வேகம் பெற்றிராது...


ஆனாலும்... சிராய்ப்புகளை தவிர்த்துக் கொள்ள இது அவசியம்!
கார் நகன்றது...
இனி தொல்லை இராது!
ஒரே பாய்ச்சலா பாய்ந்தாள் மாடஸ்டி-உராய்விலிருந்து கைகளை காப்பாற்ற தன் மேலாடையை பயன்படுத்தியவாறு...
சப்தம் கேட்டிருக்கும்...! எனக்கு மூன்று விநாடி அவகாசம்தான்!
துப்பாக்கி ஒன்றை பிடுங்கி, கீழே குதித்து டயரை குறி வைப்பதுதான் ஒரே வழி!
கீழே பாய்ந்தாள் மாடஸ்டி!
ஜோர்ஜை வீழ்த்திவிட்டாள்...
யாருக்காகவும் நாம் நிற்க முடியாது! போய்க் கொண்டேயிரு!
ஓங்கி நெஞ்சில் ஓர் உதைவிட்டாள் மாடஸ்டி
அஹ்!



வேண்டாம்-சுடாதீர்கள்!குறி தவறினால் பின் ஸீட்டிலிருக்கும் அந்தப் பெண் மீது தோட்டா பாய்ந்துவிடப் போகிறது!
மணி பத்து...!வில்லி கார்வின் என்னோடு தொடர்பு கொள்ள ஏற்கனவே ரேடியோவை இயக்கிக் கொண்டிருக்கக்கூடும்!
குடலாஜாராவிலிருந்து தன் காரிலுள்ள ரேடியோ மூலம் மாடஸ்டியோடு பேச-முயன்று கொண்டிருந்தார் கார்வின்!
...ஹாங்...இளவரசியா? -இங்கே ஒரு ப்ராப்ளம்!
இங்கேயும்தான்!-ஸர் ஜெரால்டு உங்களருகே இருக்கிறாரா?
யெஸ்...ஆனால் ''நல்ல'' விஷயங்களில் எல்லாம் அவருக்கு நாட்டமில்லை!மது,மாது,இசை-ஊஹூம்!அடுத்து நான் என்ன செய்ய வேண்டும்-சொல்!
ஷெர்ராவின் வீட்டில்—
இங்கே பிரிட்டிஷ் தூதரின் மகள் கடத்தப்பட்டிருக்கிறாள் அதிகார பூர்வமான முறையில் ஜெரால்டுக்கு இதில் ஆர்வம் இருக்குமேயானால் உடனடியாக அவரை அழைத்து வாருங்கள்!
மேடம்...ஜனாதிபதி போனில் உங்களை கூப்பிடுகிறார்...!
நீ வந்துவிட்டால் பொழுது நன்றாகவே போகிறது மாடஸ்டி!


போலீஸாரிடமிருந்து தகவல் கிடைத்தது! கடத்தல் பேர்வழி ஒருவனைப் பிடித்ததற்கு நன்றி சொல்லத்தான் அழைத்தேன். அவனை விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்!
இன்னும் சிறப்பாக செய்திருக்க வேண்டும் நான். அடுத்து உங்களுக்கு வரப்போகிற பெரியதொரு தலைவலிக்கு இந்த கடத்தல் விவகாரம் ஒரு முன்னோடியோ என்று அஞ்சுகிறேன்!
அரசியல் கைதிகள் சிலரை விடுவிக்க கலகக்காரர்கள் கையாளும் யுக்தியாக இருக்கலாம் இது!
ஆமாம்! இதுதானே இப்போதைய பேஷன்.
வில்லி கார்வின் நாளை இங்கே வருகிறார். ஒரு பிரிட்டிஷ் மேலதிகாரியும் தற்செயலாக அவரோடு வருகிறார்...
நெருக்கடிக்கு நான் ஆளாகியுள்ளேன் போலிருக்கிறதே!
கௌரேம்போவிலிருந்து சுமார் நூறு மைல் தொலைவில் ரியோ கொய்னே நதியின் மத்தியில் உள்ள ஒரு தீவில்—
ம்ம்-சாப்பிடு!
என்னை என்ன செய்யப் போகிறீர்கள்?
சிறையிலிருக்கும் எங்கள் தோழர்கள் இருபது பேரை விடுவிக்க சர்வாதிகாரி மச்சாடோவுக்கு மூன்று நாள் அவகாசம் கொடுத்திருக்கிறோம்! கோரிக்கையை அவன் புறக்கணித்தால் நீ 'க்ளோஸ்'


ஜனாதிபதி மச்சாடோ,பிரிட்டிஷ் தூதர் நார்மன்,ஸர் ஜெரால்டு டார்ரண்ட் மூவரும் கலந்துரையாடினர்...
பிரிட்டிஷ் பிரஜையான டயானா எப்படியாவது உயிரோடு மீட்கப்பட்டாக வேண்டும் என்பது அரசியாரின் விருப்பம்!
என் நோக்கமும் அதுதான்!
எதிரிகளுடைய கோரிக்கைக்கு நான் இணங்கிவிட வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா?!
வேறு வழி?
ஸாரி...!அது ஒன்றுதான் வழி என்றால் உங்கள் மகளை நீங்கள் இழக்க வேண்டியிருக்கும்!
அரண்மனை அருகே ஒரு ஹோட்டலில்...
மச்சாடோ என்ன தீர்மானத்திற்கு வருவாரோ?
உங்களுக்குத் தெரியாதா என்ன?
அசைந்து கொடுக்க மாட்டார்!
டயானாவை பலிகொடுக்க தயங்கமாட்டார் என்று சொல்கிறீர்கள்?
ஒரு நாட்டை கட்டிக் காக்கும் பொறுப்பு இருக்கிறது அவருக்கு
ப்ளாக்மெயிலுக்கு ஒரு தடவை அடி பணிந்தால், அது தொடர்கதை ஆகிவிடும்...!
அரசியல் கைதிகளை நிரந்தரமாக அடைத்து வைத்திருப்பது ஜனநாயக அரசு செய்யும் வேலை அல்ல!
இந்த நியாயம் எல்லாக் காலத்திற்கும் பொருந்தாது!
18


மக்களின் நலனைக் கருதியே இங்கே எல்லாம் நடக்கிறது!
அதற்காக, ஒரு பிரிட்டிஷ் பிரஜையை நீங்கள் பலிகொடுப்பதா?
தீவிரவாதிகளின் கோரிக்கைக்கு நான் அடிபணிந்தால் உங்கள் மகள் வேண்டுமானால் உயிர் தப்பலாம். அப்புறம்?
ஒரு வெளிநாட்டுப் பிரஜையை கடத்தி கொல்வதாக மிரட்டினால் இந்த அரசு பணிந்து விடுமென்ற தைரியத்தில் வெறியாட்டம் தொடங்கும்!
இதை நான் அனுமதிக்க முடியாது! ஆனால் வேறு ஒரு சின்ன திட்டத்தை கடைப்பிடிக்க எண்ணியுள்ளேன். மாடஸ்டியோடு முதலில் பேச வேண்டும்!
மாடஸ்டியும், கார்வினும் ஹோட்டலில்தான் இருக்கிறார்கள்... வரச் சொல்லியனுப்பட்டுமா?
வேண்டாம்... மிகப் பெரிய உதவி கேட்டு கெஞ்ச வேண்டிய சந்தர்ப்பங்களில் அவர்கள் இருக்குமிடத்துக்கு போவதுதான் நியாயம்!


அதற்குள் ஹோட்டலில்-
அப்படியே காலாற நடந்து போகலாமா?
ஐந்து நிமிடங்களுக்கு முன்தான் கிளம்பிச் சென்றார்கள்-- பழைய சர்ச்சுக்கு!
கமான்!விடாமல் விரட்டுவோம்!
அந்த மர வேலைப்பாடுகளை கவனித்தீர்களா.. வில்லி!
மார்வலெஸ்!
அட...!அங்கே யார்- பாருங்கள்!
நாசமாய்ப் போச்சு!
எதிரிகளின் மிரட்டலுக்கு நான் பணியப் போவதில்லை மாடஸ்டி...டயானா பிழைக்க வேண்டுமானால் யாராவது அவளை தேடிக் கண்டுபிடித்து மீட்டால்தானுண்டு!
இவ்வளவு பெரிய நகரத்தில் போலீஸார் அவளை தேடிக் கண்டுபிடிப்பது சுலபமல்ல!
அவள் இங்கில்லை...! காட்டுப் பகுதிக்குள் கடத்திச் சென்றுவிட்டார்கள்!
ஒரு படைப் பிரிவு மொத்தமும் முயன்றால் கூட அவளை மீட்க முடியாது!



ஆனால் இரகசியமாகவும் சாதுரியமாகவும் செயல்பட்டால் சாத்தியமாகலாம்! நீயும் மிஸ்டர் வில்லியும் சாதிக்கமுடியும்-
போச்சுடா சாமி! மாட்டிக்கிட்டோம்!
எந்த இடத்திற்கு என்று குறிப்பாகத் தெரியுமா?
பிடிபட்டவனிடமிருந்து தெரிந்து கொண்டோம்...
டயானாவை எப்படியாவது மீட்டாக வேண்டும்...!
அரசியல் கைதிகளை விடுவிக்காமல்!- இல்லையா?
வெடிகுண்டுகளை வீசி நாசத்தை விளைவிப்பவர்களை அரசியல் கைதிகள் என்று கொள்வது எப்படி? நீயே சொல்!
பிரச்னை என்னவெனில் நதியின் மேல் வாட்டத்தில் உள்ள பிரதேசம் பற்றி எங்களுக்கு எதுவுமே தெரியாது!
உன் நண்பர் ஷெர்ரா மனம் வைத்தால் உதவி செய்யலாம்...!
ஷெர்ரா... என்ன சொல்கிறீர்கள்?
நான் ரெடி! தலைதெறிக்கும் வேகத்தில் போனாலொழிய அவர்களின் மூன்று நாள் கெடுவுக்குள் போய்ச் சேர முடியாது!


சரி...கிளம்பலாமா!
நீங்கள் கிளம்புங்கள்! கடந்த 24 மணி நேரத்திற்குள் நான் செய்துள்ள ஏராளமான பாவங்களுக்கு மன்னிப்புக் கோர வேண்டும் இங்கே!
அஸ்தமன வேளையில் மாடஸ்டி குழுவினரின் படகு 30 மைல்களை கடந்துவிட்டிருந்தது...
இங்கே முகாமிட்டு இரவை கழித்துவிட்டு விடி காலையில் பயணத்தை தொடருவோம்.
நாளை இரவுக்குள் தீவை அடைந்துவிட முடியும்! பின்னரும்,பதினாறு மணி நேரம் இருக்கும்-கெடு முடிய!
அங்கே தீவில்- மறுநாள் காலையில்...
உங்களுடைய தோழர்களை விடுவித்துவிட்டதாக செய்தி வந்திருக்க வேண்டுமே! என்னை விடுவித்து அனுப்புவதற்கு என்ன?
அப்படி ஏதும் செய்தி வரவில்லை!
என்னை விட்டுவிடுங்கள்.... எவ்வளவு பணம் வேண்டுமானாலும் வாங்கித் தருகிறேன்- அப்பாவிடமிருந்து!
இதையெல்லாம் தலைவர் கோமேஸிடம் பேசிக்கொள்!
அப்படியானால் அவரோடு நான் பேச வேண்டும். அதற்காக நீங்கள் என்ன கேட்டாலும் தருகிறேன்!



இங்கே நாங்கள் ஒன்றும் மிருகங்களல்ல... பெண்ணே...!- புரிந்துகொள்!- இதோ ஏற்பாடு செய்கிறேன்!
கும்பலின் தலைவன் கோமேஸ்-
என்னை பார்க்க வேண்டும் என்றாயாமே- எதற்காக?
என் அப்பா ஒரு முக்கிய புள்ளி- ஏகப்பட்ட பணம், ஆயுதங்கள், தளவாடங்கள் எல்லாம் உங்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்வார்!
என்னை கொன்று விடாதீர்கள்- ப்ளீஸ்!
எங்களுடைய தோழர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும்!
இது நிறைவேற்றாவிடில், உன் மரணம் தவிர்க்க முடியாதாகி விடும். எங்களுக்கு வேறு வழி கிடையாது!
நீ போகலாம்!
அந்திப் பொழுதில், ஆற்றின் வேக நீரோட்டப் பகுதியை வந்தடைந்தது படகு-
இனி கால்நடையாகப் பயணத்தை தொடருவோம். நான்கு மணி நேரத்தில் தீவை அடைந்து விடலாம்!
இரவில் ஆற்றைக் கடந்து விடியும் வரைப் பதுங்கிக் கிடப்போம். மிச்சத்தை விடிந்த பிறகு தீர்மானிக்கலாம்!
ஒரு பொறாமைப் பேய்க்காக நாம் உயிரை பணயம் வைப்பதில் எனக்கு இஷ்டமில்லை!


நோ- அரை மனதோடு ஈடுபடும் காரியம் எதுவுமே உருப்படுவதில்லே. அவள் ஒரு தங்கமான பெண் என்று பொய்யாக ்வேணும் நம்புங்கள்!
மடிக்கக் கூடிய மிதவையை நீரில் போடுங்கள் வில்லி!
இந்தச் சிறு மிதவை நம் எடையை தாங்குமா?
கொஞ்ச தூரம் தானே!
வில்லி தயாரித்த இந்த அம்புகள் நாகா செவ்விந்தியர்களுடையவை போல் தோற்றமளிக்கின்றனவா என்று சொல்லுங்கள்-ஷெர்ரா!
ஏறத்தாழ அப்படித் தானிருக்கின்றன!
எதிரிகளே அப்படித் தான் நம்பவைக்க வேண்டும்!
அதோ அங்கேதான் டயாளுவை வைத்திருக்கிறார்கள்!
மேகம் நிலவை மறைக்கையில் ஆற்றைக் கடப்போம்!
ஒரு மாமிசத் துண்டை கட்டி நீரினுள் அமிழ்த்தினர் ஷெர்ரா
நினைத்தேன் - ப்ரான்ஹா மீன்கள் இங்கே ஏராளம்!


தின்ன ருசியாக இருக்கும்! நம்மை முதலில் அவை தின்னுவிடாவிட்டால்!
உங்க ஊரில் பொழுது போக்குக்கு பஞ்சமே கிடையாதப்பா!
மறுநாள் காலையில்-கலகக்காரர்கள் இருந்த தீவில்-
வேதனைக் குரிய காரியத்தை நிறைவேற்ற வேண்டிய வேளை நெருங்கிவிட்டது தோழர்களே · அவனைக் கொன்று, மரணக் காட்சியை படம்பிடித்து நம் எதிரிகளுக்கு அனுப்பி வைப்போம்-
நம் ஆற்றலை-இலட்சிய வெறியை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்!
நம் இலட்சியம் பெரிது-ஆனால் நாமோ எண்ணிக் கையில் வெகு சிலர்.நமக்கு பயங் கரவாதம்தான் சரியான ஆயுத மாக இருக்க முடியும்!
நம் வழிமுறைகள் நியாயமற்றவைகளாக இருக்கலாம்-ஆனால் இலட்சியம் நேர்மை யானது-இதை நீங்கள் புரிந்து கொண்டு காரியங்களை நிறைவேற்ற வேண்டும்-
முகாமுக்கு விளிம்பு கட்டி நின்ற புதரினுள்-
பேச்சு சாதுரியம் அவனுடைய மிகப் பெரிய பலம்-
டயானாவை இப்போது கொல்ல யத்தனிப்பார்களேயானால், நேரடி மோதல் அவசியமாகிவிடும்-


சர்வாதிகாரி மச்சாடோவின் பிடியிலிருந்து நாட்டை விடுவிக்கும் நம் இலட்சியத்திற்காக இந்தப் பெண்ணின் உயிரை மட்டுமல்ல, நம் அணைவரின் உயிரையும் பலிகொடுக்க நாம் சித்தமாக இருக்க வேண்டும்-
நான் கோமேஸை குறிவைக்கிறேன்- நீங்களிருவரும் ஆயுதம் தாங்கிய ஆசாமிகளை கவனியுங்கள். அவர்கள் சிதறி விலகியதும் வில்லி டயானாவை ஓட்டட்டும்-நாம் அவருக்கு பாதுகாப்பு தருவோம்!
ஆனால் நாம் அரக்கர்கள் அல்ல இந்தப் பெண்ணை மரணம் தழுவும் காட்சி நம் கண்களுக்கு விருந்தாக இருக்க முடியாது!
தீவி ன் தென் முனைக்கு இவளை இரு வீரர்கள் அழைத்துச் சென்று மரணத்தை அறிமுகம் செய்து வைப்பார்கள். டி.வி. காமராமேன் மட்டும் உடன் போகட்டும்!
ஓ கே-நாமும் பின் தொடர்வோம்!
பின்னர்- தென் முனையிலிருந்த திறந்த வெளியில்-
நோ -ஓ !
நோ -ஓ!
காமரா ரெடியா?
யெஸ்! பாம்பை அவிழ்த்துவிடச் சொல்!



இந்த கொடூரமான காட்சியை பார்த்த பின் எத்தனை இரவு-களில் நாம் கெட்ட சொப்பனம் கண்டு அலறிப் புடைத்து எழப் போகிறோமோ?
முட்டைக்குள்ளே முப்பதடி நீள மலைப் பாம்பு இருந்தது-
முழுப்பட்டினி போடப் பட்டிருந்த அந்தப் பாம்பு விடுபட்டதும் ஆவேசமாக இரையை நோக்கி நகர்ந்தது.
ஷெர்ரா கொதித்தெழுந்தார்-
வெறிச் செயல்-
ஷெர்ரா-சுடாதீர்கள்-எந்த ஓசையும் கூடாது!
மூவரையும் ஒட்டுமொத்தமாக அம்பெய்து வீழ்த்த முடியாது! வில்லி, ஏதாவது கதைவிட்டு கத்தி எறியுமளவுக்கு நெருக் கத்தில் செல்லுங்கள்-
உனக்கென்ன பைத்தியமா? கார்வின் வெளிப்பட்டதும் சுட்டுத் தள்ளிவிடுவார்கள்-கதைவிட அவகாசம் ஏது?
அவருக்குத் தெரியும்-என்ன செய்ய வேண்டுமென்று!
பாம்பு டயானவை நெருங்கியது-காமரா இயங்கிக் கொண்டிருந்தது-


கண்களும், கைகளும் கட்டப் பட்ட ஒரு உருவம் மரத்தின் பின்னுலிருந்து தட்டுத் தடு மாறியவாறு வெளிவந்தது-
தண்ணீர்-
யாரடா இவன்-குறுக்கே-
தண்ணீர், தண்ணீர் என்று அந்நிய மொழி-யில் புலம்பியவாறு எதிரிகளை நோக்கி முன்னேறினுர் கார்வின்-
தாகம்-உதவி-
அயல்நாட்டவன்! யாரிவன்? இவனை இந்தக் கதிக்கு ஆளாக்கியது யாரோ-
முதல் அம்பு இலக்கை தாக்கியதும் இரண்டாவது அம்பை நாண் ஏற்றினுள் மாடஸ்டி-
அஹ்!
மாடஸ்டியின் இரண்டாவது அம்பு கிளம்பிய அதே கணத்தில் கார்வினும் கத்தியை வீசினுர்-
சக்!
சக்!
28


இனி அந்த பாம்பை கவனிக்கும் பொறுப்பு உங்களுடையது ஷெர்ரா-
டயாருவை கவனிக்கும் பொறுப்பை கொடுப்பாயோ என்று பயந்தேன்- நன்றி!
மெள்ள நகர்ந்து முன்னேறு- வில்லி- எதிர்ப்பு வந்தால் மிரண்டு ஓடிப்போகும் குணமுடையவை இவ்வகை பாம்புகள்!
ஆனால் இந்தப் பாம்புக்கு அந்த வழக்கம் தெரி-யாது போலும்!
தலையை குறிவைக்க முடியவில்லையே!
விலகு! நான் அருகே போகிறேன்! அது என் உடலை சுற்றிக்கொள்ளட்டும்-பிறகு அதன் தலையை குறி வைப்பதில் சிரமம் இராது உனக்கு!
ஆனாலும் உனக்கு 'தில்' அதிகம்!
தலைக்கு பின்புறமாக போய்விடு-வில்லி!
பாம்பு ஷெர்ராவின் உடலை சுற்றிக் கொண்டது-
தன் பலம் அனைத்தையும் திரட்டி பாம்பின் தலையைக் கொய்தார் கார்வின்-



இவ்வளவு பெரிய பாம்பை இதற்கு முன் நான் பார்த்த தில்லை!
இனி, கட்டை அவிழ்த்து விடலாமே!
இப்போது வேண்டாம்!
இப்போது வாய்க் கட்டை அவிழ்த்தால் ஒப்பாரி வைத்து ஊரைக் கூட்டிவிடு- வாள். ஆபத்தாகிவிடும்.
இன்னும் ஆபத்து முழுமையாக விலகிய பாடில்லை. உன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு நாங்கள் சொல்கிறபடி நட- இல்லையேல், கூண்டோடு கைலாசம் தான் - புரிகிறதா!
அவர்களுடைய முகாம் மறுபக்கம் இருக்கிறது-நம்மை அவர்கள் காண வாய்ப்பில்லை.
ஏய்-ஆடாதே! மிதவை கவிழ்ந்ததோ, பிரான்ஹாக்களுக்கு இரையாகிப் போவோம்!


இவ்வளவு நடந்த பிறகும், திமிர் கொஞ் சமும் குறையக் காணோம்!
கண்காணிப்புப் பொறுப்பிலிருந்த ஒருவன் மிதவையை பார்த்து விட்டான் -
யாரோ-ஊடுருவல் பேர்வழிகள்!
சீறிக்கொண்டு வந்தது ஒரு தோட்டா -
நம்மை பார்த்து விட்டார்கள்- புகை மண்டலத்தை எழுப் புங்கள் வில்லி.
இனி நீ கட்டை அவிழ்த்தெறிந்து விட்டு இஷ்டம் போல் அழலாம்! -பெண்ணே!
புகை கக்கும் கருவியை நீரில் மிதக்கவிட்டார் கார்வின் -
குப்பென்று எழுந்தது புகை மூட்டம் -
மிதவையில் நால்வர் போகக் கண்டேன், தலைவரே! ஒருத்தி பலி பீடத்திற்கு நீங்கள் அனுப்பிய பெண் -
உடனே கிளம்ப படகை ஆயத்தம் செய்யுங் கள்!
ஜூலியோ நீ என்னோடு வா!


பலி கொடுக்குமிடத்தில்-
ஒருவன் கத்திக்கும் இருவர் நாகா அம்புகளுக்கும் பலியாகி கிடக்கின்றனர்
நாகா செவ்விந்தியர்களின் வேலை இது என்று நம்மை நம்ப வைக்கும் முயற்சி-
படகுத் துறையில்-
அவர்களை விரட்டிப் பிடித்து கொல்ல வேண்டும்- தயவு தாட்சண்யத்திற்கு இடமேயில்லை!
இதில் கோட்டை விட்டால் நாம் பலவீனப்பட்டு விடுவோம். கற்றுக் குட்டிகள்- கையாலாகாதவர்கள் என்று மக்கள் காறி உமிழ்வார்கள்!
மூன்று மணி நேரம் கழித்து-
இனி படகுப் பயணம் சிரமமானதாக இராது!
ஐயோ படகை காணோமே!
நூறு மைல் தூர பயணத்திற்கு அவர்கள் நம்பியிருந்த படகை காணோம்-
நாகா செவ்விந்தியர்கள் பார்வையில் பட்டிருக்க வேண்டும்-தள்ளிக்கொண்டு போய்விட்டார்கள் போலிருக்கிறது.
அந்த கொலைகாரக் கும்பல் நம்மை விரட்டிப் பிடித்து விட்டால்- ஐயோ!
கலவரமடையாதே! கால் நடையாகவே சென்று விடலாம்!


நிஜமாகவா?
கானகப் பாதை ஒன்று உண்டு. பத்து நாட்கள் பயணம் செய்ய வேண்டியிருக்கும்!
அந்தக் காலணியோடு இவளால் தொலை தூரம் நடக்க முடியாது. போர்வையை கிழித்து காலில் கட்டி விடுங்கள்!
ஓ யெஸ்!
டயானா. பாதை கரடு முரடானதாக இருக்கும். அந்த பயங்கரவாதிகள் நம்மை துரத்திக் கொண்டு வரலாம். மனத் திண்மை நிறைய வேண்டும் துணிச்சலோடு நடந்து கொள்!
உன் அறிவுரைகள் தேவையில்லை! உனக்கு முடியும் என்றால் அது எனக்கும் முடியும். புரிந்ததா?
கானகத்திலேயே பிறந்து வளர்ந்த ஒருவன் தடங்களை ஆராய்ந்து சொன்னான்
இங்கே ஒரு படகு நின்றிருக்கிறது. இங்கே வந்த நாகா செவ்விந்தியர்கள் படகை கொண்டு போயிருக்கக் கூடும்!
ஓகோ!
நாம் தேடும் நால்வர் குழு, சில மணி நேரத்திற்கு முன், கால்நடையாக இவ்வழியே போன தடம் தென்படுகிறது!



அவர்களை பிடித்து விட இயலுமா?
நீண்ட பயணமாதலால் அவர்கள் ஊர் சென்றடைவதற்குள் விரட்டிப் பிடித்து விட வாய்ப்பு உண்டு!
இரவு நெருங்கிக் கொண்டு இருந்தது-
இந்த உபநதியில் பிரான்ஹா இருக்காது அல்லவா?
ஆழமில்லாத இடங்களில் அவை காணப் படுவதில்லை-
இரவு தங்க நல்ல இடம் தேட வேண்டும்!
அருகிலேயே இருந்து விட்டால் நல்லது!
'காலணி'யை கழற்றி உலர வைப்பேன்! நீட்டு உன் காலை!
நன்றி!
மடக்கழுதை மாடஸ்டி, அல்டாப் பேர்வழி ஷெர்ரா மாதிரி இல்லை நீங்கள்! என்னிடம் ரொம்ப அன்பு காட்டுகிறீர்கள்!
என் மாதிரி இனிய சுபாவம் எல்லோருக்கும் வாய்க்குமா- என்ன?



டயானாவை வில்லி நன்றாகத்தான் சமாளிக்கிறார்!
இந்த மாதிரி விஷயங்களில் அவர் சமர்த்தர்!
பூச்சிகளிடமிருந்து காத்துக் கொள்ள கொசுவலை அவசியம்தான். ஆனால் எதிரிகளின் கவனத்தை ஈர்த்து விடாதோ?
இரவில் எதிரிகள் விரட்டி
வர மாட்டார்கள்!
அத்தோடு, சிறுத்தைகளின் நடமாட்டம் இருக்கலாம். திரையை, வலையோ என சந்தேகித்து விலகி ஓடிவிடுமாதலால் ஆபத்து குறைவு.
வாஸ்தவம் தான்!
அங்கே-
இருட்டி விட்டதால் தடம் தெரியவில்லை!
இரவை முகாமிட்டு இங்கே கழித்து விட்டு கிழக்கு வெளுத்ததும் கிளம்பி விடலாம்
வில்லி நீங்கள் போய் தூங்குங்கள்... முதலில் நான், பிறகு ஷெர்ரா, அடுத்து நீங்கள்... காவலிருக்கலாம்!
ஓ.கே. இளவரசி!
டயானா முரண்டு பண்ணாமல் வருவாளா?
வெறுப்பதற்கு ஷெர்ராவ
நீயும்-அவளது கவலைகளை
பகிர்ந்து கொள்ள நானு
இருக்கும் வரை
பிரச்சனையே வராது
இளவரசி!


இரு தினங்களுக்குப் பின்-விடிகாலையில்...
ஷெர்ரா எங்கே?
இப்போது வந்து விடுவார்.
எதிரிகள் எவ்வளவு தொலைவில் வந்து கொண்டிருக்கிறார்கள் என்று இரகசியமாக அறிந்துவர இருளில் சென்றார்.
பயங்கரவாதிகளா... ஐயோ!
நம்மை விரட்டிப் பிடித்துவிட்டார்கள் எனில் நம் கதி?
அவர்கள் பாதை மாறி போயிருக்க வேண்டும் -பயப்படாதே!
உண்மை ஏதுமில்லை! வேட்டையாட அவகாசமில்லை...! அத்தோடு- எதிரிகள் பாதை மாறிப்போகவும் இல்லை!
ஆனாலும் வில்லி அருமையாக ரீல் விடுகிறார்!
அவர்கள் பகலில் பயணத்தை தொடர்ந்த போது ஷெர்ரா வந்து சேர்ந்து கொண்டார்.
ஆளை இன்னும் காணோமே என்று பார்த்தேன்...
எங்கே நீங்கள் வழி தவறிவிட்டீர்களோ என்று பயந்தே போனேன்!
மாடஸ்டி என்றைக்குமே பாதை விலகி சென்றதில்லை. அவளுடைய மோப்ப சக்தி அபாரமானது!
ஏது...திடீரென்று அவளுக்கு புகழுரை? கட்சி மாறியாச்சா வில்லி?


சேச்சே...அப்படியில்லை டயானா...!அவளைப் போல் மட்டரகமான பெண்ணுக்கு இப்படியொரு சக்தியா அநியாயம் என்று சொல்ல வந்தேன்!
அதுதானே பார்த்தேன்! ஆனால்-அவள் ஏதாவது சொன்னால் வேதவாக்காக எடுத்துக் கொள்கிறீர்களே...ஏன்?
அது-வந்து... வந்து...என் மீது ஒரு 'பிடி' உண்டு அவளுக்கு!
நினைத்தேன்! சனியன்!
ஹூம்-ஒரு பொய்யா இரண்டு பொய்யா- எனக்கு நரகம்தான் சந்தேகமேயில்லை?
கோமேஸின் கும்பலை கண்டீர்களா?
இரண்டு மணி நேர பயணம் பின் தங்கியிருக்கிறார்கள். இந்த இடைவெளி நாளொன்றுக்கு அரைமணி குறையலாம்...அதாவது- பயணம் முடியுமுன் அவர்கள் நம்மை பிடித்துவிட வாய்ப்புண்டு!
டயானாவால் வேகமாக நடக்க முடியவில்லை.உணவு கையிருப்பும் மிக சொற்பம்....
எதிரிகளோடு மோதல் தவிர்க்க முடியாதது...
அந்த நெருக்கடி தானே வந்து சேரும் வரை காத்திராமல் நேரத்தையும் இடத்தையும் நாமே தேர்ந்தெடுத்துக் கொள்வோம்!
37


என்ன அரட்டை அங்கே?
உயிரோடு ஊர் போய்ச் சேர திட்டமிட்டுக் கொண்டிருக்கிறோம்... உனக்கும் இதில் ஆர்வம் இருக்கும் என்று நினைத்தேன்!
அந்த கையாலாகாத கும்பலிடமிருந்து என்னை காப்பாற்றியதற்காக நான் உன்னிடம் மண்டியிட்டு நன்றி சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறாயாக்கும்?
இல்லை...!
'தாங்க்ஸ்' என்ற ஒரே ஒரு வார்த்தை சொல்லியிருந்தாலே போதும்! ஆனால் இப்பொழுது அது முக்கியமல்ல... உன்னைத் தேடி கோமேஸ் விரட்டி வருகிறான்...!
கொஞ்சம் கொஞ்சமாக அவன் நெருங்கி வருகிறான்...
இறுதியில் நாம் எல்லோரும் பிழைத்திருந்தால் அப்போது நீ நன்றி சொன்னால் போதும் டியர்!
மறுநாள் பயண முடிவில்—
ஏன் நின்றுவிட்டோம்...? இரவு கவிழ இன்னும் ஒருமணி நேரம் இருக்கிறதே! எதிரிகள் வேறு துரத்தி வந்து கொண்டிருக்கிறார்கள்...
நேரடி மோதலில் இறங்கத் தீர்மானித்துவிட்டோம் டயானா...! எதிரிகள் நாம் பத்து நிமிடங்களுக்கு முன் கடந்து வந்த திறந்த வெளியில் இன்றிரவை கழிக்க முகாமிட்டுத் தங்கக் கூடும்... அதிரடி கொடுக்க அரிய வாய்ப்பு!


அவர்கள் எண்ணிக்கை நாற்பதுக்கு குறையாது- எனக்குப் பயமாக இருக்கிறது!
இரவு கவிழ்ந்து ஒரு மணி கழித்து-ஒரு புதரின் பின்னாலிருந்து வெளிப்பட்டார் கார்வின்.
நாம் எதிர்பார்த்த மாதிரியே எதிரிகள் அந்த திறந்த வெளியில் முகாமிட்டிருக்கிறார்கள் இளவரசி!
குட்!
எத்தனை பேர் இருந்தால் என்ன? தந்திரத்தால் வென்றுவிடுவாள் இந்த சூன்யக்காரி மாடஸ்டி!
எல்லாம் முடியும் வரை டயானாவை பார்த்துக்கொள்ள வேண்டியது உங்கள் பொறுப்பு ஷெர்ரா!
நாசமாய்ப் போச்சு! இந்த ஆயா வேலையை வில்லியிடம் கொடுத்தால் என்ன? இவளுக்கு அவனைத் தானே பிடிக்கிறது!
ஆனால் வில்லியின் உதவி எனக்கு அங்கே தேவை!
நான் உன்னோடு வருகிறேன் இளவரசி!
எங்கே போகிறார்கள்?
எதிரிகளோடு மோத...! வாயை மூடு!
இரண்டே பேர் -அப்படி என்ன சாதிக்க முடியும்? அவளுக்கு மறை கழன்றுவிட்டதா?
கோமேஸின் பிடியிலிருந்து உன்னை விடுவிக்க முடிந்த வித்தையை திட்டமிட்டவள் அவள்தான்...


உங்களுக்கும் வயிற்றை கலக்குகிறது- இல்லையா? அவள்மீது ரொம்பப் பிரியம்! அப்படித்தானே?
இருக்கலாம்...! வளவளவென்று பேசிக் கொண்டிராதே...! சப்தம் எதிரிகளை எட்டிவிடப்போகிறது!
எதிரிகளின் முகாம்—
எங்கெங்கே காவலர்கள் நிற்கிறார்கள் என்று முதலில் பார்க்கலாம். மேல் திசையில் நீங்கள் போங்கள். மறுபக்கம் நான் போகிறேன். திரும்பவும் இங்கேயே சந்திப்போம்!
யாரோடும் எக்காரணம் கொண்டும் இப்போது மோத வேண்டாம்!
யெஸ்! விடிவதற்கு முன்னர்தான் நம் வேலை.
இரவு முழுக்க நிதானமாகவும் பொறுமையோடும் ஆராய்ந்தறிந்தனர்-
விடிய இரண்டு மணி இருக்கையில்—
இந்தப் பக்கம் மூவர்
நான் இருவரைக் கண்டேன்...கடைசி 'ஷிப்ட்' சற்றுமுன் பொறுப்பேற்றுக் கொண்டது.


சரி...நாம் ஆரம்பிக்கலாம்!
காவலாளிகளை ஒவ்வொருவராக ஓசைப்படுத்தாமல் வீழ்த்தினர்...
பொத்தென்று விழுந்து சத்தம் போடாமல் அப்படியே உட்கார்ந்து விட்டான்...!
வில்லிக்கும் அதிர்ஷ்டம் இருந்தால் தேவலை!
மறுபக்கம்-
வா...வந்து கொஞ்சம் உட்கார் தம்பி...நான் தாக்குவதற்கு ஏதுவாக!
ஊஹூம்...அந்த ஆள் விறைப்பாக சிலை போல் நின்று கொண்டேயிருந்தான்!
பயலை கிட்டே வரவழைக்கணுமே!
ஐந்து நிமிடங்களுக்குப் பின் இருளினூடே ஏதோ வெண்மையாக தென்படுவதை கண்டான் காவலாளி!
அந்த புதரின் மீது... என்ன அது?



கைக்குட்டையா?
பக்கத்திலிருந்த
இன்னொரு காவலாளி காலடியோசை கேட்டு துணுக்குற்றுத் திரும்பினான்!
கார்லோஸா? ஏன் இப்படி அலைந்து கொண்டிருக்கிறான்?!
கார்லோஸ்...உன் இடத்திற்கு உடனே திரும்பு. கோமேஸுக்கு தெரிய வந்தால்-
செத்துப்போன கார்லோஸின் உடுப்புக்குள்ளிருந்ததோ மாடஸ்டி!
அவனை கைத்தாங்கலாக பிடித்து, மெள்ள கீழே கிடத்தினாள்.
இந்தப் பக்கம் இன்னும் ஒருத்தன் பாக்கி...ஆனால் வில்லியின் உதவியின்றி அவனை நான் நெருங்க முடியாது!


பத்து நிமிடங்களுக்குப் பின்...
இருவரையும் வீழ்த்தி விட்டேன் ...இளவரசி!
குட்! அங்கே இன்னும் ஒருவன் பாக்கி...!
என்னோடு வாருங்கள்.
திறந்த வெளி...உறுதியான பாறை...கத்தி அல்லது அம்பை பிரயோகித்து வீழ்த்தினால், அவன் விழும் ஓசை ஊரைக் கூட்டிவிடும்...
நிலவொளி இடைஞ்சலாக உள்ளது...!
எனவே...?
சரிவின் பின்பக்கமாக சென்று அந்த சிறு முகட்டின் மேலே வந்து சேரவேண்டும் நாம். மிச்சத்தை அங்கே சொல்கிறேன் வாருங்கள்.
விரைவில் -
ம்...அடுத்து?
முட்டையை அவிழ்த்து நைலான் கயிறை எடுங்கள்!


பாறை நீட்டிக் கொண்டிருப்பதால் கயிற்றில் ஊஞ்சல் போல் தொங்கலாம்.நான் சமிக்ஞை காட்டும்போது என்னை தொங்கவிடுங்கள்!
ஒரு கையால் கயிற்றை இறுகப் பற்றியவாறு முகட்டின் மேல் தளத்தில் உறுதியாக படுத்துக் கொண்டார் கார்வின்!
தூரத்தை துல்லியமாகக் கணித்தவாறு பாறை விளிம்பிலிருந்து நழுவினாள் மாடஸ்டி...!
இப்போது அவள் கடிகாரப் பெண்டுலம் போல் நகரத் தொடங்கினாள் -விசையோடு!
கண்ணிமைக்கும் பொழுதில் காவலாளியை நெருங்கிவிட்ட மாடஸ்டி...அவனுக்கு நேர் பின்னால் வந்து சேர்ந்ததும்...
...கயிற்றை விட்டுவிட்டாள்.


அவள் தரையைத் தொட்ட போது எழுந்த சிறு ஓசை காவலாளியை திரும்பிப் பார்க்க வைத்தது.
மாடஸ்டியின் கையிலிருந்த கான்கோ சீறியது.
அட்டகாசம்!
இவனிடம் உள்ள வெடிகுண்டுகள் பயன்படும்...!
இரு நிமிடங்களுக்குப் பின்—
எல்லோரும் நிம்மதியாக உறங்குகிறார்கள்!
ஏகப்பட்ட பேர்...! கோமெஸின் வழிமுறையை நாமும் பின்பற்றுவதானால் எல்லோரையும் கூண்டோடு கைலாசம் அனுப்ப வேண்டும்!
காவலுக்கு யாரும் இல்லை என்பது அவர்களுக்குத் தெரியாது!
நாமென்ன கோமஸா?
இன்னும் அரைமணி நேரத்தில் கிழக்கு வெளுத்துவிடும்...
45


அப்போது நாம் தாக்குதலை தொடங்கினுல் போதுமானது!
விடிகாலையில் விழித்தெழுந்த பயங்கரவாதிகள் சுறுசுறுப்பாக இயங்கினர்...!
சாப்பிட பத்து நிமிட அவகாசம்-அடுத்து உடனே நாம் கிளம்புகிறோம்!
அப்போது—
வெடிகுண்டு-படுத்துக் கொள்ளுங்கள்!
பதுங்குங்கள்!
எதிரிகளின் மத்தியில் விழுந்து உருண்டோடிய வெடிகுண்டு வெடிக்கவேயில்லை!
எவனும் எழக் கூடாது! -இல்லையேல், அடுத்து வரும் வெடிகுண்டுகள் விசை தூண்டப்பட்டு வரும்! அதுமட்டுமல்ல-



மறுபக்கம் நின்றிருந்த மாடஸ்டி தன் கையிலிருந்த இயந்திர துப்பாக்கியை இயக்கினாள்.
இது எச்சரிக்கை யாரேனும் அசைந்தால் மண்டையோடு நிறைய தோட்டா ரொப்பி விடுவோம்!
ஒருபக்கம் வெடிகுண்டு... மறுபக்கம் இயந்திரத் துப்பாக்கி!
சமர்த்தாக நடந்து கொள்ளுங்கள்!
நான் வீசும் கூழாங்கற்கள் யார் மீது விழுகிறதோ அந்த ஆறுபேர் மட்டும் முதலில் எழுந்து கைகளை தலைமீது வைத்தவாறு இந்தப் பக்கமாக வரவேண்டும்!
காவலாளிகள் என்னவானார்கள்?
அவர்கள்... செத்துப் போயிருக்க வேண்டும்!
நாலைந்து பேராக, பயங்கரவாதிகள் அனைவரையும் மலை முகட்டின் சுவரை ஒட்டி நிற்குமாறு செய்தனர்-
அரை மைல் தொலைவில்-
அதென்ன வெடியோசை-
ஹாங்-அதை எதிர்பார்த்துத் தான் இவ்வளவு நேரமும் காத்துக் கொண்டிருந்தேன்-



மாடஸ்டி, கார்வின் இருவரின் யுக்தி பலித்துவிட்டது என்று அறிவிக்கும் சமிக்ஞை அது-வா-போய் நாமும் சேர்ந்து கொள்ளலாம்!
மாடஸ்டி!
ஹலோ-ஷெர்ரா-வந்து இந்த துப்பாக்கியை கொஞ்சம பிடியுங்கள்!
ஹா-! அதோ சோமேஸ்! துப்பாக்கி, கத்தி ஏதாவது கொடுங்கள் இப்படி- அவனைக் கொல்ல!
யாரையும் நீ கொல்ல முடியாது, டயானா!
ஏன்? அவன் மட்டும் என்னை மலைப்பாம்புக்கு இரையாக்க துணிந்தானில்லையா?
அது அவன் வழி! ஆனால் நம் வழி முறையே வேறு! வாயை மூடிக்கொண்டு ஒதுங்கி நில்-
பயங்கரவாதிகளின் துப்பாக்கிகளைப் பழுதாக்கி, அவர்கள் பின் தொடர்ந்து வராமலிருக்க காலணிகளை பறித்து தீயிலிட்டுக் கொளுத்தினார்க
இனி-மெள்ள நடந்து ...திரும்பிச் செல்லுங்கள்!


கோமேஸ்-இப்படி வா...முன்னால்!
சர்வாதிகாரி மச்சாடோவின் கருவியாக பணியாற்ற வெட்கமாக இல்லையா உனக்கு?
அரசியல் பேச்செல்லாம் நமக்கெதற்கு?
உன் இலட்சியம் ஈடேற ஒரு அப்பாவிப் பெண்ணை கைதியாக்கி,கொல்லவும் உத்தரவிட்டவன் நீ...எனவே, இப்போது உன்னை நான் கொன்றால் அது அநியாயம் ஆகாது-இல்லயா?
பச்சைக் கொலை!
தனக்கு என்று வந்தவுடன் நியாயம் தலைகீழாகிவிட்டது பார்த்தாயா...!என் இலட்சியத்தை தெரிந்து கொள்ள ஆர்வமில்லையா உனக்கு?
பயங்கரவாதத்தை அடியோடு வெறுக்கிறவள் நான்.பிணைக் கைதியை கொள்வது மனிதாபிமானமற்றது-மிருகத்தனமானது... என் அகராதிப்படி!
காரணம் எதுவாயினும் அதை கடைப்பிடிக்கிற நபர் யாராயினும் தொடர்ந்து உயிர்வாழ அருகதையற்றவன்...எனவே-



கத்தியை இப்படி கொடுங்கள்-வில்லி!
என் நெஞ்சில் பாய்ச்சப் போகிருயா...பாய்ச்சு -மரணத்திற்கு பயந்தவனல்ல இந்த கோமஸ்!
பெரிய வீரனல்லவா நீ?
உன்னை நான் இப்போது கொன்ருல்,நாட்டு விடுதலைக்காக உயிர்விட்ட தியாகி என்ற பட்டம் கொடுத்து விடுவார்கள அதற்கு அருகதையற்றவன் நீ!
கும்!
நீ கையாலாகாத கோழை என்று உலகத்தாருக்கு நிருபித்துக்காட்டப் போகிறேன்-
இடது கையிலிருந்த கான்கோ கட்டையிஞல் குறிப்பிட்ட விதமாகத் தாக்கிஞள் மாடஸ்டி...!
அதிர்ந்து போய் விழுந்த கோமஸ் செயலிழந்து போனன்
இப்போதிருந்து நீ ஒரு காலாவதியான பயங்கரவாதி!...இந்த தோல்வி-என்றென்றும் நீ தலை தூக்க முடியாதவாறு செய்யும் மரண அடியாகும்!
உன்னுடைய தோல்வியின் ஞாபகார்த்த சின்னமாக உன் தாடியை வெட்டி எடுத்துக் கொண்டு செல்லப் போகிறேன்!



தோட்டா இல்லை, செருப்பு இல்லை, வீரத்-தைப் பறைசாற்றும் தாடி இல்லை. இனி நீ மெள்ள ஊர்ந்து உன் ஊர் போய்ச் சேர்!
பயல் இனி செல்லாக்காசு தான்!
தேவையான அளவுக்கு இயந்திரத் துப்பாக்கிகள் ரைபிள்கள், தோட்டாக்கள் சேகரித்துக் கொண்டு தங்கள் வழியில் பயணத்தைத் தொடர்ந்தனர் மாடஸ்டியும் மற்றவர்களும்...
இனி அவன் தலை தூக்கவே முடியாது... ஒரு பயல் இனி அவன் கீழ் பணியாற்ற சம்மதிக்கமாட்டான்.
இனிஆயுளுக்கும் அவன் யாரையும் கடத்திச் செல்ல மாட்டான்!அது போதும் எனக்கு!
டடடடாய்ங்! எல்லாம் முடிந்தது டயானு...ஒரு 'சில நாட்களில் பத்திரமாக ஊர் போய் சேர்ந்துவிடலாம்!
அப்பாடா...இது ஆரம்பமான வினாடி தொடக்கம் இப்போது தான் நிம்மதியாக மூச்சுவிட முடிகிறது எனக்கு!
பயணம் தொடர்ந்தது-
வரவர பேச்சைக் குறைத்துக் கொண்டு தீவிரசிந்தனையில் இறங்கிவிட்டாய் நீ-ஏன்...என்ன ஆச்சு உனக்கு?
அதுதான் எனக்கும் புரியவில்லை!
மாடஸ்டியை தரங்கெட்டவள் என்று திட்டினேன், ஆனால் இன்று நான் உயிரோடு இருக்கின்றேன் என்றால் அது அவளால்தான்!


என் அபிப்ராயம் தவறு என்று உறைக்கிறது!
நீயாகவே புரிந்து கொண்டதில் பரம திருப்தி!
மரணத்தை சந்தித்து மீண்ட அனுபவமும், மற்றவர்கள் காட்டிய பரிவும் டயானாவின் சிடுசிடுப்பையும் திமிர்த்தனத்தையும் ஒடுக்கிவிட்டிருந்தன!
டயானா வெகுவாக மாறிப்போய் விட்டாள் ...அவளை எப்படி வழிப்படுத்தினாய்?
என்னோடு நெருங்கிப் பழகும் யாருக்குமே என் தங்கக் குணம் ஒட்டிக் கொண்டுவிடும்!
கடந்த இரு வாரங்களாக ஏதோ வேறொரு உலகில் நடமாடுகிற பிரமை ஏற்பட்டிருக்கிறது எனக்கு!
ஏற்பட்ட பயங்கர அனுபவங்கள் என்னை அடியோடு மாற்றி விட்டது. உனக்கு நன்றி சொல்லத் தோன்றுகிறது.
அவசியமில்லை... நீ சொன்னதாகவே வைத்துக் கொள்ளலாம்.
பிரிட்டிஷ் தூதருக்குப் பிரஸிடெண்ட் மச்சாடோ போன் செய்தார்...
குட் நியூஸ்! உங்கள் மகள் பத்திரமாக இருக்கிறாள்-ஊர் திரும்பிக் கொண்டிருக்கிறாள்!
யெஸ்...யெஸ் மாடஸ்டி குழுவினருக்கு உங்களுடைய மனமார்ந்த நன்றியை நேரில் தெரிவிக்க வாய்ப்பு கிட்டும்!
கோமஸை நிர்மூலமாக்கிவிட்டாய்! அவனுடைய சகாக்கள் ஓடிவிட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. உனக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன் மாடஸ்டி!


உடனடியாக வீட்டிற்குப் போய் நிம்மதியாக ஷவர்பாத் எடுக்க வேண்டும்-எனக்கு!
உங்களுக்காக அதை நான் செய்யவில்லை மிஸ்டர் பிரஸிடெண்ட்... அவனுடைய வழிமுறைகள் எனக்குப் பிடிக்கவில்லை- அதனால்தான்!
வீடு திரும்பி இரு தினங்களுக்குப் பின் ஸர் ஜெரால்டு அளித்த விருந்தில்—
டயனாவின் அப்பா-வுக்கு உங்களிடம் ஏற்பட்டுள்ள அபிமானம் கொஞ்ச நஞ்சமல்ல- அவரை சந்தித்தீர்களா?
ஆமாம்...நேற்று- ஆனால் ரொம்ப சங்கோஜப்படும்படி ஆகிவிட்டது!
அதோ...டயானாவே வருகிறாள்-புதிய வார்ப்பாக!
ஆம், டயானாவின் மனமாற்றம் வந்த வேகத்திலேயே மறைந்து போய்விட்டிருந்தது!
எல்லா ஆண்களும் உன்னையே சுற்றிச் சுற்றி வருகிறார்களே- அப்படி என்னதான் இருக்கிறது-உன்னிடம்?
கடவுளே! பழையபடிக்கு வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிவிட்டதா?
என் அப்பாகூட வாய்க்கு வாய், வார்த்தைக்கு வார்த்தை உன் சாகஸத்தைச் சொல்லி ஓரேடியாக புகழ்கிறார்! சரியான சனியன் நீ!
நீங்கள் ஒரு ஜோக்கர்! அவளை சுற்றிச் சுற்றி வந்து டான்ஸ் ஆடுகிறீர்கள்!
வா...டயானா நாமிருவரும் நம் வழியில் போய்விடலாம்
வா, போய் அந்த குளத்தை சுற்றி காலாற நடந்து விட்டு வரலாம்!
வில்லியின் போக்கு விளங்கவில்லையே!


வாய் வார்த்தையாக எத்தனை சொன்னாலும் புரியாது உனக்கு... டயானா—
அந்த மாடஸ்டி குரங்கிடம் சிறப்பாக அப்படி என்ன இருக்கிறது- என்னிடம் இல்லே?
உன் மூளைக் கொதிப்பை குறைத்து நேர்வழியில் சிந்திக்க உதவக்கூடும்! பெண்ணு நீ?
தொப்!
ஊப்ப்ப்!
ஹலோ, ஸார்- வெரி ஸாரி!
ஊஹூம், சிலரை திருத்தவே முடியாது- டயானா ஓர் உதாரணம்!
உன்னை அடியோடு வெறுக்கிறேன்!
நீ யாரைத்தான வெறுக்கவில்லை -ஹூம், பரிதாபத்திற்குரிய விஷயம்!
அங்கே ஏதோ 'தொப்'பென்று சப்தம் கேட்டதே!
அலட்டிக் கொள்ளாதே -மிஸ் மில்லர்ட் மீண்டும் குளத்தினுள் விழுந்து விட்டாள் என்று நினைக்கிறேன்!
கரெக்ட்! சரி-நாம் சாப்பாட்டை கவனிக்கலாமா ...இளவரசி?
54
முற்றும்.


மரணப் பாலம்!
சமுதாய முன்னேற்றத்துக்காக மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டங்களுக்கு முட்டுக்கட்டையாக பல பிரச்சனைகள் முளைப்பது புதிய விஷயமல்லதான். என்றாலும் மூட நம்பிக்கை கொண்ட ஒரு கொலை வெறிக் கும்பலின் அடாத செயலை விவரிக்கும் இந்தக் கதை சற்று வித்தியாசமானதொன்றாகும் ..
இது நடந்தது பத்தொன்பதாம் நூற்றாண்டின் இந்தியாவில்-




இதோ ரயில் இந்தப் பாலத்தின் மீது செல்லும்போது பயணிகளின் கண்ணில் படும் அற்புதமான காட்சி இருக்கிறதே அதை விவரிக்க வார்த்தைகளே கிடையாது- இந்தியாவின் அரிய இயற்கைக் காட்சிகளில் அதுவும் ஒன்று-
பாலத்திற்கு மிக நெருக்கத்தில் விடாது கொட்டிக் கொண்டிருக்கும் பிரம்மாண்டமான நீர்வீழ்ச்சி கண்ணுக்கு ஓர் அரிய விருந்து-
அற்புதம்! நம்பவே முடியாத விந்தைக் காட்சி! இது ஒரு பொறியியல் சாகஸம்!
இதை கட்டியவர் ஜான் கிராண்ட் என்னும் ஆங்கிலேய எஞ்சினீயர்-தீவிரமான காரியவாதி-
துடிப்புள்ள அந்த இளைஞருக்கு இங்கே சவாலாக முளைத்தது ஒரு பெரும் பிரச்னை. அது ரொம்பப் புதிரானது மட்டுமின்றி பயங்கரமானதும் கூட!


பேரொலி எழுப்பியவாறு பாலத்தை கடந்து தொடர்ந்து ஓடிக் கொண்டிருந்தது அந்த எக்ஸ்பிரஸ்.
சுவாரஸ்யமான விஷய மாக இருக்கும்போ லிருக்கிறதே!
ஆமாம் - உங்களுக்கு கேட்கவிருப்பம் என்றால் அந்த சம்பவத்தை விபர மாக சொல்கிறேன். கேளுங்கள்!
கிராண்ட்டிடம் சர்வேயராக அப்போது பணி பாற்றி வந்த சில்ட்டன் என்ற இளைஞனிடமிருந்து அந்த விபரங்களை கேட்டறிந்ததாக குறிப்பிட்டார் அந்த நபர்.
யாரது வருவது- ராஜாவா? வேலை நடக்கட்டும் என்று ஒதுங்கி இராமல் அவர் அடிக்கடி இங்கே வந்து மூக்கை நுழைக்கிறது சரியில்லை!
தான் செலவிடும் பணம் வீணடிக்கப்பட வில்லை என்று உறுதி செய்து கொள்ள அவர் விரும்புவது நியாயம்தானே!
தன் ஜனங்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கு இந்தப் பாலம் ரொம்ப பயனுள்ளதாக இருக்கக்கூடும் என்ற நம்பிக்கையில் பணத்தை கொட்டிக் கொடுத்து வருகிறார்.
மறுநிமிடம் ராஜாவின் அழகிய ரோல்ஸ் ராய்ஸ் அவர்களை நெருங்கி வந்து நின்றது.
வேலை மளமளவென்று நடைபெற்று வருகிறதைக் காண மகிழ்ச்சியாக இருக்கிறது மிஸ்டர் கிராண்ட்!
திட்டப்படி எல்லாம் நடந்து வருகிறது. அரசே! ஆனால் கடுமையான கட்டம் இனிமேல்தான் வரவிருக்கிறது!
ரயில்பாதை எவ்வழியாக செல்லவிருக்கிறது என்று ராஜாவுக்கு வரைபடத்தில் காட்டினான் கிராண்ட்!
நாம் குறுக்காக பாலம் அமைக்கவிருக்கும் இந்த ஆறு ரொம்ப பொல்லாதது.


பாலம் அமைக்கப்படவிருந்த இலக்கு நீர் வீழ்ச்சிக்கு மிக நெருக்கமாக இருந்தது. அந்த இடத்தில் ஆற்றின் அகலம் 300 அடிகள்.
BRIDGE
BRIDGE
F A
Island rock
ஆற்றோட்டத்தின் மையத்தில் உள்ள திட்டு உறுதியான பாறைகளாலானது. பாலத்தின் மைய தூண் அதன் மேல் அமையவிருக்கிறது!
அபாரமான யுக்தி! அற்புதமான திட்டம்!
அதுவரை மௌனமாக இருந்த ஷரீபா- ராஜாவின் உதவியாளன்- கோபவேசமாக பேசலுற்றான்-
அது நடக்காது- ஒரு போதும் நடக்காது!
கேலியாக நகைத்தான் கிராண்ட்-
முடியாது என்று யாராவது எனக்கு சவால் விட்டால் அது தவறான கருத்து என்று எப்படியாவது நிரூபித்துக் காட்டி விடுவது என்னோடு பிறந்த பிடிவாத குணம்!
புறப்படும்போது ராஜா சொன்னார்-
ஷரீபாவின் மறுப்பை சட்டை செய்ய வேண்டியதில்லை மிஸ்டர் கிராண்ட்- அவன் பேச்சை அப்படியே கேட்டு நடப்பதாக இருந்தால் இன்னமும் நான் யானை மீதுதான் போய்க் கொண்டிருப்பேன். இந்த ரயில் பாதை வீண் முயற்சி- பணம் விரயம் ஆகுமே தவிர பயனேதும் இராது' என்பது அவனுடைய கூற்று!
இந்தப் பாலம் உங்களுடைய சமஸ்தானத்தை வெளி உலகோடு இணைக்கப்போகிறது. விளையப் போகும் நன்மைகள் ஏராளம்!
ஆற்றை தொடுமுன், மலைப்பகுதியை குடைந்து செல்ல வேண்டியிருந்தது- ஒரு நாள்-


யந்திரங்களின் கடமுடா ஓசைகளை மிஞ்சிக் கொண்டு ஓர் ஓலம்-
ஐயோ-அங்கே பாருங்கள்!
குடையப்பட்டுக் கொண்டிருந்த இலக்கிற்கு நேர் மேலே புழுதிப படலத்தைக் கிளப்பியவாறு பாறைகள் சரிந்து வந்தன-
ஓடி வாருங்கள்!
இங்கே நின்ருல் ஆபத்து!
ஆனுல் அங்கிருந்த ஒரு நபர்க்கு தப்பியோட அவகாசம் இல்லாது போயிற்று-
ஆ-ஐயோ!
பதைபதைப்போடு அங்கே ஓடினன் கிராண்ட்-
பாஸ்- ஹுசைன் அங்கே உள்ளே சிக்கிக் கொண்டு விட்டான்!
ஓடிப் போய் இரண்டு புல்டோசரை கொண்டு வா இங்கே!


புல்டோசர்கள் பாறை குவியல்களை அப்புறப் படுத்திக் கொண்டிருந்த நிமிடத்தில் சில்ட்டனை திட்டிக் கொண்டிருந்தான் கிராண்ட்-
மூன்று தினங்களுக்கு முன் தான் மேலே ஏறி அந்த இடத்தை நன்ருக பரிசீலனை செய்தேன- உறுதியான பாறைப் பகுதியாக இருந்தது.
பின்னே-பில்லி சூனிய வேலை இது என்கிருயா? பணியில் தவறுகள் நேரிடுவதை நான் சகித்துக் கொள்வதேயில்லை என்று உனக்கு தெரியுமில்லையா?
அன்றிரவு- தொழிலாளிகளின் முகாமில் அசாதாரண அமைதி நிலவியது. அந்த திட்டப்பணி தொடங்கியதிலிருந்து பெரிய அளவிலான விபத்து நிகழ்வது இதுவே முதல் தடவை-
ஹுசைன் பாவம்! கிராமத்தில் மனைவியும், குழந்தைகளும் இருக்கிருர்கள் என்பதாக தகவல்!
காலக்கெடுவுக்குள் முடிக்க வேண்டும் என்பதற்காக நம்மை ரொம்பவும் தான் பாடாய் படுத்துகிருர் எஞ்சினீயர்!
கான் என்ற தொழிலாளி ஆக்ரோஷமாக முணுமுணுத்தான்-
நீர்வீழ்ச்சிக்கு அருகே ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் போது நம்மில் எத்தனை பேர் சொர்க்க லோகம் போய்ச் சேரப் போகிருேமோ?
அப்போது- அந்த பிராந்தியத்தில் எதிரொலித்தது ஒரு விசித்திரமான ஓசை-
என்ன சப்தம் அது- ஏதோ மந்திரம் ஓதுவது போல்?
செத்துப் போன ஹுசைனுக்கு நல்வரவு கூறி பேய் பிசாசுகள் ஆர்ப்பாட்டம் போடுகின்றனவோ?
எந்தத் திசையிலிருந்து வருகிறது அந்த புதிரான ஓசை என்று சொல்ல இயலாதிருந்தது. ஓரிரு நிமிடங்களுக்குப் பின் சட்டென அவ்வோசை ஓய்ந்து போனது. ஆனல் தொழிலாளிகளின் நெஞ்சில் பிரவகித்திருந்த பீதி அடங்கவேயில்லை.
தங்களுடைய எல்லையில் இடையூருக நாம் ரயில்பாதை இங்கு உள்ள பேய் பிசாசுகள் விரும்பவில்லை என்று தோனறுகிறது!


தொழிலாளிகள் அஞ்சியது போல் அது ஒன்றும் பேய் பிசாசகள் எழுப்பிய ஒலம் அல்ல-
வெள்ளை உடை அணிந்திருந்த அந்த உருவங்கள் ஒரு குகையினுள் வந்து கூடின-
நம் குல தெய்வமான தூரி தேவதைக்கு மரபு முறைப்படி நேர்த்திக் கடனை செலுத்தவே நாம் இங்கே கூடியிருக்கிறோம்! தோழர்களே-முதலில் பலி சொடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்வோம்!
பலி பீடத்தின் மீது ஒரு வெள்ளைத் துணி விரிக்கப்பட்டது சடங்குக்கு தேவையான உபகரணங்கள் அதன் மீது வைக்கப்பட்டன-
மரபு முறைப்படி ஒரு வெள்ளை ஆடும் ஒரு கறுப்பு ஆடும் பலி கொடுக்கப்பட்டன-அதையடுத்து பூசாரி அவர்களுடைய பிரமாணத்தை எடுத்துரைத்தான்-
முன்னொரு காலத்தில் ஒரு ராட்சஸ ஜந்து நம் பிராந்தியத்தினுள் வந்து சேர்ந்தது-நம் குலதெய்வமான தூரி தேவதை அதனோடு சண்டையிட்டு அழிக்க முற்பட்டபோது அந்த ஜந்து சிந்திய ஒவ்வொரு துளி இரத்தத்திலிருந்தும் ஒரு புது ராட்சஸ ஜந்து உருப்பெற்றது-இந்த விபரீதத்துக்கு முடிவுகட்ட தேவதை சாமர்த்தியமாக அத்தனை ஜந்துக்களையும் ஒவ்வொன்றாக கழுத்தை நெறித்தே கொன்று குவித்தாள்!



அந்தப் பூசாரி வேறு யாருமல்ல- ராஜாவின் உதவியாளன் ஷெரீ- பாதான்-
அவன் ஆணையிடுகையில், இதை பயன்படுத்தி நாம் பலி கொள்ள தயங்கலாகாது! தரு- ணம்வந்துவிட்டதுதோழர்களே!
அவனுடைய ஆவேசக் குரல் குகையினுள் எதிரொலித்தது-
நம் முதாதையர்களுக்கு புகலிடமாக விளங்கிய இந்தப் பழமையான கோவிலுக்கு ஆபத்து ஏற்பட விருக்கிறது!
நறநறவென்று பல்லைக் கடித்தனர் கூட்டத்தினர்-
இங்கே ரயில் பாதையும், பாலமும் அமைக்கிறவர்கள் மாகாளியின் பகைவர்கள்- அவர்களுடைய முயற்சியை முறியடிக்க வேண்டும்- பகைவர்களின் நெஞ்சில் பீதியை ஏற்படுத்துவோம்- அவசியப்பட்டால் கழுத்தை நெறித்து கொன்று குவிப்போம்!
மறுநாள் தொழிலாளிகள் முறைப்போடு குழுமியிருக்கக் கண்டான் சில்ட்டன்-
ஏன் வேலையை தொடங்கவில்லை இன்னமும்? எழுந்து போய் வேலையை பாருங்கள்!
நேற்று நடந்த விபரீதம் பாஸ்"க்கு மறந்து போச்சா? எங்களுடைய உயிருக்கு என்ன உத்தரவாதம்?
என்ன சொல்லியும் வேலையை தொடங்க மறுத்துவிட்டனர் தொழிலாளிகள்!
கான் என்கிறவன்தான் ஸார் தொழிலாளிகளை மடக்கிப் போட்டிருக்கிறான்!
எப்போதும் ஏதாவது குற்றம், குறை சொல்லிக் கொண்டிருக்கிற பேர்வழி அவன்-
ஜான் கிராண்ட் போய் நின்று உறுத்துப் பார்த்த மாத்திரத்தில் குற்றவுணர்வோடு தொழிலாளிகள் எழலாயினர்-
நீங்கள் எல்லாம் செம்மறியாட்டுக் கூட்டமா இல்லை-மீசை வைத்திருக்கும் ஆண்பிள்ளைகளா? சொல்லுங்கள்!


இதைச் சொன்ன கானே நோக்கிப் பாய்ந்தான் கிராண்ட்-
இந்த அடாவடித்தனமான பேச்சு
எனக்கு கொஞ்சமும் பிடிக்காது-
பிரச்சனைக்கு மூலகாரணமே நீதான்-
கானின் தாடையில் இடியென
இறங்கியது ஒரு குத்து-
ஓம்!
அஹ்-
சுதாரித்துக் கொண்டு எழுந்த
கானின் முகத்தில் கொலைவெறி
தாண்டவமாடியது-
என்னை அடித்துவிட்டாய்-
இல்லையா? உன்னை கொல்
லாமல் விடமாட்டேன்!
பழிவாங்கத் துடிக்கும் நாகம் போல் பாய்ந்தான் கான்-
ஸார்- ஜாக்கிரதை!
கையில் கத்தி
வைத்திருக்கிறான்!
இம்மாதிரி முரட்டர்களை சமாளிக்கும் கலையில்
கிராண்ட் தேர்ச்சி பெற்றிருந்தான்-
ஐயோ!


எழுந்து ஓடிப் போய் விடு- இங்கிருந்து!
கரூர், கண்டிப்பு- இவைதான் கிராண்ட்டின் வழிமுறைகள். காரியங்களை குறித்த காலக் கெடுவுக்குள் கச்சிதமாக செய்து முடித்து தலை சிறந்த எஞ்சினியர் என்ற பெயர் வாங்க இந்த குணதிசயம்தான் கிராண்டுக்கு கைகொடுத்து-
தங்களுடைய தலைவன் இப்படி மண்ணைக் கவ்வுவான் என்று நினைத்துப் பார்த்திராத தொழிலாளர்கள் கசப்போடு அங்கிருந்து நகர்ந்தனர்-
இங்கே மறுபடியும் தலைகாட்டினால் தோலை உரித்து விடுவேன்!
இனியும் ஏன் மசம்ச்வென்று இங்கே நின்று கொண்டிருக்கிறீர்கள்?
இதோ- போய் உடனே வேலையை தொடங்குகிறோம் ஸார்!
அன்றிரவு- முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அங்கங்கே காவலர்களை நியமிக்க கிராண்ட் தவறவில்லை-
ஆனால் தாங்கள் காவல் நிற்பது யாரை அல்லது எதை முறியடிக்க என்று காவலாளிகளுக்கு தெரியவில்லை. நள்ளிரவு வேளையில்-


சந்தடியின்றி காவலாளியை நெருங்கி கையிலிருந்த சால்வையால் அவனுடைய கழுத்தை நெறித்தான் ஒரு கயவன்-
ஓசை எழுப்பாமல் செத்து விழுந்தான் அந்தக் காவலன்-
ப்ப்-ப்!'
மறைவில் பதுங்கிக் கிடந்த மற்ற முரடர்கள் ஓடி வந்து அந்த காவலாளியின் உடலை இழுத்துச் சென்றனர். கொலைகாரன் ஸ்டோர் அறைக் கதவை உடைத்து திறந்தான்-
யாரும் எதுவுமே பேசவில்லை-அவரவர் பணி இன்னதென்று தெளிவாக சொல்லி அனுப்பப்பட்டிருந்தது-
மண்ணெண்ணெய் டிரம்மை கவிழ்த்து, தீக்குச்சியை உரசிப் போட்டுவிட்டு வெளியேறி ஓடினான் அந்த கொலைகாரன்-


அதே மாதிரியான விஷமம் அங்கே வேறு ஐந்து மையங்களிலும், அதே கணத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தது-
ஓரிரு நிமிடங்களில் செய்தி முகாம் முழுக்க பரவி விட்டது-
ஸார்- ஸ்டோர் அறையில் தீப்பற்றிக் கொண்டு விட்டது!
யாருடைய விஷமம் இது?
ஸ்டோர் அறையை நோக்கி ஓடினுன் கிராண்ட்-
அந்த பம்ப்பை இங்கே கொண்டு வந்து நிறுத்து- மற்றவர்கள் ஓடிப் போய் வாளிகளை எடுத்து வாருங்கள்!
அதோ அங்கே தீப்பற்றியுள்ள இடத்துக்கு அருகில் தானே எரிபொருள் வைப்பறை இருக்கிறது? ஆபத்தாயிற்றே!
டேவிட் எங்கோ ஓட்டம் பிடித்ததை கண்ணுற்ற கிரண்ட் எரிச்சலோடு முணுமுணுத்தான்-
இங்கே தீயை அணைக்க எல்லோரும் ஒட்டு மொத்தமாக் முயன்ருல் தான் சாதிக்க முடியும் என்ற நிலையில் வேறெங்கோ ஓடுகிருனே- பொறுப்பில்லாத பயல்!


தலை தெறிக்க ஓடிய சில்ட்டன், மறுநிமிடமே பற்றி எரிந்து கொண்டு இன்னொரு இலக்கை நெருங்கி விட்டான்-
தீ அந்த அறையையும் தீண்டுமேயானால்-
DANGER HIGH EXPLOSIVE FUEL STORE
அருகே நின்று கொண்டிருந்த புல்டோசர் மீது பாய்ந்து ஏறினன் சில்ட்டன்-
தாமதிக்கும் ஒவ்வொரு விநாடியும் ஆபத்து- இந்த புல்டோஸர் சட்டென்று கிளம்பி நகர வேண்டுமே ஆண்டவனே!
நேராக தீயின் மையப் பகுதியிலிருந்து ஊடுருவியது அந்த புல்டோஸர்-
தீ ஜ்வாலைகளுக்கும் எரிபொருள் வைப்பறைக்குமிடையே ஐந்தடி அகலத்தில் பெரும் பள்ளத்தை ஏற்படுத்திச் சென்றது-
அற்புதமான காரியம் இது சில்ட்டன் - எரிபொருள் பற்றிக் கொண்டு விடும் ஆபத்தை தவிர்த்து விட்டாய்!


இந்த அசம்பாவிதம் எப்படி உருவானது ஸார்?
சதிவேலை! அநேகமாக கானின் வேலையாக இருக்கக்கூடும்! ஆனால் ஒரு புதிரான விஷயம்-மூன்று காவலர்கள் மாயமாக மறைந்துவிட்டிருக்கின்றனர்!
அவர்கள் ஒருவேளை கானின் பக்கம் சாய்ந்திருப்பார்களோ?
இருக்காது! நானே பொறுக்கி எடுத்த நபர்கள்-விசுவாசம் மிக்க தொழிலாளிகள்!
தன் உதவியாளர் பக்கம் திரும்பினார் ராஜா-
இந்த விஷமத்தை செய்து வருவது யாராக இருக்கக்கூடும் ஷெரீபா?
இந்த ரயில் பாதைக்கு செலவிடுகிற பெருந்தொகை வீண் என்றும், மாறாக அதை மக்களின் பசியைப் போக்க பயன்படுத்தலாம் என்றும் நினைக்கிறார்கள். அவர்களில் யாரேனும் தீவிரவாதிகள் ஒருவேளை இந்த நாசவேலையை செய்திருக்கலாம்!
காலையில் ராஜா காரில் அங்கே வந்து சேர்ந்தார்-
தீப்பிடித்து எரிவதை அரண்மனையிலிருந்து பார்த்தோம்-அதிக சேதமோ?
கவலைப்பட ஏதுமில்லை அரசே! திட்டப்படி அடுத்த வாரம் பாலம் கட்டும் பணி தொடங்கிவிடும்-நம் முயற்சியை முறியடிக்க யாரோ முனைப்பாக செயல்பட்டு வருகின்றார்கள். இருந்தாலும் பணி தடங்கலின்றி தொடர்ந்து நடைபெறப் போவது உறுதி!
ரயில்பாதை அமைக்கும் பணிதொடர்ந்து விறுவிறுப்பாக நடந்தது. பாலம் அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடு தொடங்கப்பட்டன-
உலோக கொக்கியை வீசியெறியும் பொறியை சீக்கிரம் நிலைப்படுத்துங்கள்!


ராக்கெட் அமைப்பு ஒன்று படீரென்ற ஓசையுடன் புறப்பட்டது உலோக கொக்கியை உடன் எடுத்துக் கொண்டு-
ஆற்றோட்டத்தின் மத்தியிலிருந்த திட்டில் கிடந்த பாறைகளினூடே பற்றிக் கொள்ள ஏதாவது கிடைக்குமா என்று தேடியது உலோக கொக்கி-
பாறை ஒன்றை பற்றிக் கொண்டதும் அதனோடு இணைக்கப்பட்டிருந்த உறுதியான நைலான் கயிற்றின் மறுமுனை கரையில் ஒரு பெரும் பாறையில் கட்டப்பட்டது. அதன் வழியாக தொழிலாளி ஒருவன் திட்டை நோக்கி பயணமானான்-
மிகவும் ஆபத்தான பணி இல்லையா ஸார்?
இம்மாதிரி வேலைகளில் அந்தத் தொழிலாளி அஜீஸ்- நல்ல அனுபவசாலி- பயப்பட ஏதுமில்லை சில்ட்டன்!
தொய்வாக இருந்த கயிற்றின் மையப் பகுதியை கடக்கும்போது அஜீஸின் உடலில் பாதி நீரினடியில் இருந்தது-
ஐயோ- அஜீஸை வெள்ளம் அடித்துச் சென்றுவிடப் போகிறது!
பதறாதே-அவன் தொடர்ந்து முன்னேறுவதை கவனி!
முடிவேயில்லாத பயணம்போல் நீண்டது அந்த முயற்சி. முடிவில்-திட்டில் போய் பத்திரமாக கரை சேர்ந்தான் அஜீஸ்!
நீங்கள் சொன்ன மாதிரியே அஜீஸ் சாதித்து விட்டான் அற்புதமான சர்க்கஸ் சாகஸம் இது!
மறுமுனையை அஜீஸ் உறுதியாக பிணைத்ததும் முக்கிய தளவாடங்களை கயிற்றின் வழியாக நாம் அங்கே அனுப்ப வேண்டும்!


திட்டிலிருந்த பாறைகளின் மறுபக்கமாக சென்ற அஜீஸ் கரையிலிருந்தவர்களின் பார்வையிலிருந்து மறைந்து விட்டான்
கயிற்றை உறுதியாக பிணைக்க ஏற்ற இடத்தை தேடுகிறான் போலிருக்கிறது!
நேரம் போய்க் கொண்டேருக்கிறது! அஜீஸ் அங்கே என்ன தான் செய்து கொண்டிருக்கிறான்!
செய்வதறியாது தலையை சொறிந்து கொண்டு நிற்கும் ரகத்தை சேர்ந்தவனல்ல ஜான் கிராண்ட்- ஒரு மணி நேர இடைவெளிக்குப் பின் அங்கே வந்து சேர்ந்தது ஒரு ஹெலிகாப்டர்-
பத்து பதினைந்து முப்பது-நிமிடங்கள் கரைந்து கொண்டிருந்தன துரித கதியில்-ஆனால், அஜீஸ் தலைகாட்டவேயில்லை!
அவனுக்கு ஏதேனும் விபரீதம் சம்பவித்திருக்குமோ?
பாஸ்! கயிறு தொய்ந்து கிடக்கிறது-பாருங்கள்!
கயிற்றை இழுத்து ஆராய்ந்தபோது மறுமுனையில் அறுந்து போயிருப்பது தெரிய வந்தது-
உறுதியான நைலான் கயிறுயிற்றே. எப்படி அறுந்தது?
புதிரான விஷயம்-குழப்புகிறது!
ஹெலிகாப்டர் தரையிறங்கியதும் சட்டென பாய்ந்து ஏறினான் கிராண்ட்-
அங்கே ஏதாவது ஆபத்து காத்துக் கொண்டிருக்கக் கூடும்!
இப்படியெல்லாம் பயந்து கொண்டிருந்தால் ஒரு காரியமும் சாதிக்க முடியாது. அங்கே மாயமாக மறைந்து போனவன் என் தொழிலாளிகளில் ஒருவன். அசட்டையாக இருக்க என்னால் முடியாது சில்ட்டன்!



பறந்த ஹெலிகாப்டர் திட்டுப் பகுதியை
நோக்கிச் சென்றது-
இறங்கப் போகிறீர்களா- என்ன மிஸ்டர் கிராண்ட்?
ஆமாம்- முடிந்த வரை ஹெலிகாப்டரை தாழ பறக்க விடு!
ஹெலிகாப்டரிலிருந்து கீழே தொங்கினன் கிராண்ட்-
அஜீஸ் இருப்பதாகவே தெரியக் காணோம்?
ஹெலிகாப்டர் இன்னும் தாழ இறங்கியதும் பாறை மீது காலூன்றிக் கொண்டு விட்டான் கிராண்ட்-
கச்சிதமாக தரை இறங்கி விட்டான்-
ஐம்பதுக்கு இருபது தப்படி பரப்பளவுதான் இருந்தது. அந்த பாறைப் பகுதி பாசி படர்ந்து வழுக்கலாக இருந்தது- அதன் மீது எதுவுமே இல்லை-
அஜீஸ் எப்படி மாயமாக மறைந்திருக்க முடியும்? கால்தவறி சுழித்துக் கொண்டு ஓடும் ஆற்ரோட்டத்தில் விழுந்திருப்பானே- அப்படி நிகழ்ந்திருந்தால் அவன் உயிர்பிழைக்க வாய்ப்பே இல்லை-


உலோக கொக்கி இன்னமும் பாறையை பற்றியவாறு இருந்தது-
அட- அநியாயமே கயிறு தானாக அறுந்துபோகவில்லை-யாரோ கத்தரித்திருக்கிறார்கள்!
விபரீதம் எத்தன்மையானது என்று விளங்கிக் கொள்ளவே முடியவில்லை.
ஆகட்டும் எஞ்சினியர் சார்!
ஹலோ பைலட்-கரைக்கு திரும்பிச் சென்று சில்ட்டனிடம் தளவாடங்களை ஹெலிகாப்டரில் ஏற்றச் சொல்! கயிற்றின் வழியாக அனுப்புவதற்கு பதிலாக உன் ஹெலிகாப்டரை பயன் படுத்த நான் தீர்மானித்துள்ளேன்!
கட்டிட தளவாட சாமான்கள் ஹெலிகாப்டர் உதவியுடன் கொஞ்சம் கொஞ்சமாக திட்டுப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டன. கரைக்கு திரும்பிய கிராண்ட் சில்ட்டனை சந்தித்தான்-
சாமான்களை அனுப்பும் வேலையை நீ கவனித்துக் கொள் சில்ட்டன்-நான் போய் ராஜாவை பார்த்து பேசிவிட்டு வருகிறேன்-ஏற்கனவே நான்கு பேரை இழந்து விட்டோம். இந்த விபரீதம் தொடர்வதை நான் சகித்துக் கொள்ள முடியாது!
அதையடுத்து அரண்மனை சென்றடைந்தான் கிராண்ட்-
71


அவனே வழக்கம் போல அன்பு-டன் வரவேற்றார் ராஜா-
மிஸ்டர் கிராண்ட்- இங்கே வரு-வாய் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவேயில்லே! ஏன் ஏதாவது பிரச்சனையா?
இந்த திட்டப் பணியின் உள்ளுக்-குள்ளே ஏதோ விபரீதம் உருப்-பெற்று வருகிறது. அது என்ன என்று எனக்குத் தெரிந்தால் ஒன்று- போராடி களேவேன். அல்லது ஒதுங்கிச் செல்லப் பார்ப்பேன்!
அதைப் பற்றி நீங்களாவது, ஷெரீபாவது ஏதாவது விளக்-கம் சொல்வீர்கள் என்று எதிர் பார்த்து நான் இங்கே வந்தேன்!
எல்லா சக்திகளோடும் போராட உங்களால் ஆகாது மிஸ்டர் கிராண்ட்- உங்களுடைய முயற்-சிக்கு தெய்வங்களின் நல்லாசி இருக்கவேண்டும். அவைகளுக்கு சினம் மூட்டுவதாக இருந்து விட்டால் விளைவை உங்களால் தாங்கிக் கொள்ள முடியாது!
தளவாடங்கள் அனைத்தும் திட்டில் வந்து இறங்கியதும்-தாமதமின்றி பணி தொடங்கி விட்டது
இங்கேயுள்ள ஜனங்களுக்கு தெய்வ பக்தி ரொம்ப அதிகம் மிஸ்டர் கிராண்ட்- இங்குள்ள பலவகை தெய்வங்கள் எல்-லாம் ஆண்டவனின் அவதாரங்கள் என்ற நம்பிக்கை நிலவுகிறது!
மூடநம்பிக்கைகளோ, அச்சுறுத்தல்களோ என் கடமையை நான் நிறைவேற்றுவதற்கு முட்டுக் கட்டைகளாக இருக்க முடியாது!
அன்றிரவு நள்ளிரவில்-
ஹே- அங்கே திட்டில் ஏதோ ஓசை எழுந்ததை கேட்டா-யல்லவா?
அருவியின் ஓசையில் எந்த சப்தத்-தையும் நீ கேட்டிருக்க வாய்ப்-பில்லே. எதற்கும் தொலேக் குவிப்பு விளக்கை ஏற்றுகிறேன!



ஒரிரு நிமிடங்களுக்குப் பின்-விளக்குகள் திட்டுப் பகுதியை குறிவைத்து பளிரிட்டன-
அங்கே கவனித்தாயா-அந்த அநியாயத்தை?
வா-ஓடிப்போய் எஞ்சினியரை எழுப்பி விஷயத்தைச் சொல்வோம்!
திரும்ப அந்த கோபுர அமைப்பை கட்டிமுடிக்க முழுதாக இரண்டு நாட்கள் பிடித்தது-இரவு முழுக்க தொலைக் குவிப்பு விளக்குகள் எரிய உத்தரவிட்டதோடு, ஆயுதமேந்திய இரு காவலாளிகளையும் நிற்கச் செய்தான் கிராண்ட்-
இரகசியமாக சதிவேலையில் ஈடுபடுவோரை நெருங்க விடாமல் செய்யும் இந்த ஏற்பாடு.





கிராண்ட் அங்கே வந்து சேர்ந்தபோது மேலும் சில விளக்குகள் ஏற்றப்பட்டன-விளக்கு வெளிச்சத்தில் அழிவின் பரிமாணம் தெளிவாகவே தெரிந்தது-
நோ-அந்த கோபுர அமைப்பு தானாக சரிய வாய்ப்பே கிடையாது!
பேய், பிசாசுகளின் வேலையாகத்தானிருக்கும்!
இரவு அமைதியாக கழிந்தது. ஆனால் மறுநாள் காலையில்-
அவர்களைப் பற்றி எந்த தடயமுமில்லை. திட்டில் இருந்த தளவாடங்கள் அனைத்தும் சிதைக்கப்பட்டு உருக்குலைந்து கிடந்தன-
ஹே- எங்கே மாயமாக மறைந்தார்கள் அந்த இரு காவலாளிகளும்?
இந்த விஷமத்தை செய்தது யாராக இருந்தாலும் மென்னியை முறிக்காமல் விடப்போவதில்லை நான்!
சாபக்கேடுள்ள இடம் இது! இனியும் நாம் இங்கே வேலை செய்யக்கூடாது என்று எச்சரிக்கவே இந்த விபரீதங்கள் எல்லாம் நிகழ்கின்றன!


தொழிலாளிகள் கலைந்து செல்லலாயினர். அவர்களை விரட்டிப் பிடித்தான கிராண்ட்-
எங்கே போகிறீர்கள்?
சாபக்கேடுள்ள இடம் இது- இங்கே வேலை செய்ய தைரியமில்லை எங்களுக்கு- போரேும்!
அவனை தீர்த்துக் கட்டும் பெருமையை எனக்கு அளியுங்கள் ஷெர்பா! என் ஜனங்களுக்கு மத்தியில் வைத்து என்னை இழிவுபடுத்திய அந்த வெள்ளையனை தப்பாமல் நான் கொல்வேன்!
நல்லது கான்! சகுனங்கள் சாதகமாக அமைந்ததும் உனக்கு சொல்லியனுப்பு-கிறேன்!


வேலை பாதியில் நிற்கையில் யாரையும் போக அனுமதியேன்- திரும்பி நடங்கள்!
கிராண்ட்டின் மன உறுதியை எதிரிகள் தெளிவாக புரிந்து கொண்டு விட்டனர்- அன்றிரவு
அருமையாகத்தான் செய்தீர்கள் சகோதரர்களே- ஆனால் இது போதாது. அந்த பயல் கிராண்ட் உயிரோடிருக்கும் வரை வேலையை தடுத்து நிறுத்தவே முடியாது-தேவதை பொறுமை இழந்து விட்டாள்!
மிகுந்த பிரயாசையின் பேரில் மீண்டும் பணி சுறுசுறுப்பாக நடைபெற ஏற்பாடு செய்து முடித்தான் கிராண்ட்- மற்றவர்களை கடுமையாக வேலை வாங்கியது மட்டுமின்றி தன்னையும் சடுமையாக வருத்திக் கொண்டான்-
ஒருநாள்- இரவு மணி: 2. இன்னமும் தூங்கப் போகாமல் ஏதோ வரைந்து கொண்டிருந்தான் கிராண்ட். அப்போது-


பின்னால் என்ன சப்தம்?
கொலையாளியின் கையிலிருந்த சால்வை தன் கழுத்தைச் சுற்றி விழுந்த அதே கணத்தில், சட்டென்று அவனுடைய மணிக்கட்டுகளை இரும்புப் பிடியாகப் பற்றினான் கிராண்ட்-
மாட்டிக் கொண்டாய்!
பற்றிய வேகத்தில் அப்படியே 'தம்' பிடித்து தூக்கிச் சுழற்றி முன்னால் வந்து விழச் செய்தான் கிராண்ட். வந்தவன்- கான்!
அஹ்!
சட்டென்று அவன் மேல் வெறியோடு பாய்ந்தான் கிராண்ட்-
அடேய் துரோகி!


உடம்பு முழுக்க அவன் கிரீஸை
தடவிக் கொண்டிருந்ததால்
சுலபமாக வழுக்கிக்
கொண்டு ஓடலானான்-
அறையை விட்டு வெளியே
அவர்கள் ஓடி வந்து பார்த்த
போது தொலைவில் ஓடிக்
கொண்டிருந்தான்-
அதோ-
ஓடுகிறான்!
கான் பயல்
தான் அவன்!
அவனை விரட்டிப் பிடிப்பதை விட வேறொரு சமயோசிதமான காரியம் செய்வோம். அவனை இரகசியமாக பின்தொடர்ந்து சென்றால் நம் அனைத்து பிரச்னைக்கும் காரணமான மூலஸ்தானத்தை கண்டு கொள்ள முடியும் என்றே தோனறுகிறது!
தடுமாறி கீழே விழுந்த கிராண்ட் தன்னை சுதாரித்துக் கொண்டு
எழுந்த போது-
என்ன... என்ன...
நடந்தது இங்கே-
யாரது?
அந்த சண்டாளன் என்னை கழுத்தை
நெறித்துக் கொல்ல முயன்றான்-
தப்பியோடுகிறான். விரட்டிப் பிடி!
அந்த யோசனை விவேகமானதாகப்பட்டது கிராண்ட்டுக்கு-
அவர்களின் வேகம் மட்டுப்பட்டது-
ஆற்றை நோக்கி
ஓடுகிறானே- முட்-
டாள்தனமாக!


நீர்வீழ்ச்சியின் விளிம்பிலிருந்த பாறைகளுக்கு அருகே கான் கண நேரம் தயங்கி நிற்பது தெரிந்தது. மறுகணம்- மாயமாக மறைந்து போனது அவனுடைய உருவம்-
மறைந்து விட்டானே! அவனை நாம் விரட்டிப் பிடித்திருக்க வேண்டும்! இப்படி தப்பிக்க அனுமதித்திருக்க லாகாது!
பொறுங்கள்! என்ன நடந்திருக்கும் என்று என்னால் சரியாக யூகிக்க முடிகிறது!
இது பற்றி முன்னர் ஒரு புத்தகத்தில் படித்திருக்கிறேன். நீரோட்டத்தின் வேகம் காரணமாக அருவியின் முகப்பு பகுதியிலுள்ள பாறையின் அடிப்பாகம் தேய்ந்து நீர்வீழ்ச்சிக்கும் பாறைக்குமிடையே ஆள் போகக் கூடிய அளவு இடைவெளி இருக்க வாய்ப்புண்டு!
உன் கணிப்பு சரியாக இருக்குமேயானால் கானையும் அவனுடைய சகாக்களையும் அங்கே நாம் சந்திக்கலாம். நான் இங்கே காத்து நிற்கிறேன். நீ ஓடிச் சென்று உடலுறுதி படைத்த டஜன் தொழிலாளிகளை அழைத்துக் கொண்டு வா!
கான் மறைந்த இடத்தை உற்று நோக்கியவாறு நின்றான் கிராண்ட்-
அருவியின் பேரொலி காரணமாக, தன்னை சில முரடர்கள் நெருங்கி வந்தபோது எழுந்த சிறு ஓசையை கேட்கத் தவறி விட்டான்-
அவனை உயிரோடு பிடியுங்கள் சகோதரர்களே! நம் குலதெய்வம் தன் வைரியை நேருக்கு நேர் காண அங்கே துடித்துக் கொண்டிருக்கிறாள்!
77


ஜான் கிராண்ட் திரும்ப சுயவுணர்வு வரப் பெற்ற போது தன் காலும், கையும் பிணைக்கப்பட்டிருப்பதைக் கண்டான்-
ஓ- தெய்வமே! உனக்கு ஒரு பலி கொண்டு வந்திருக்கிறோம்! ஆனால் அதற்குமுன் உன் ஆணையை நிறைவேற்றத் தவறிய ஈனப்பிறவி யின் மீது உன் சோபத்தைக்காட்டு!
ஒரு உருவத்தை இழுத்து வந்து சிலையின் காலடியில் போட்டனர்-
உன் கையாலாகாதனத்துக்கு நீ செத்து மடிவதுதான் சரியான தண்டனை கான்!
கருணை காட்டுங்கள்! என்னை விட்டுவிடுங்கள்!
ஆனால் கிராண்ட் பார்த்துக்கொண் டிருந்த படுபயங்கரமான முறையில் கழுத்து நெறிக்கப்பட்டு கான் கொல்லப்பட்டான்-
நோ- நான் காண்பது நிஜமல்ல - தீக்கனவு!
ஆக்ரோஷமாக கத்தினான் கிராண்ட்-
அடேய் ஷெரீபா- அங்கே நடந்த அத்தனை அசம்பாவிதங்களுக்கும் மூல காரணம் நீதானடா- கொலைகாரப்பாவி! ஆனால் இந்த ஈனச் செயலை நீ செய்ய காரணம் என்ன? உண்மையில் நீ யார்?
என் உண்மை சொரூபத்தை இன்னும் புரிந்து கொள்ளாத மடையனே- கேள்! மிகவும் பழமையான தக்ஸ் எனும் குலத்தை சேர்ந்தவர்கள் நாங்கள். எங்கள் குலதெய்வம்- இந்த தூரி தேவதை!



பயங்கரவாதிகளான தக்ஸ் இனத்தவர் பூண்டோடு அழிக்கப்பட்டு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேல் இருக்குமே!
எங்கள் முதாதையர் ஒரு சிலர் தப்பி விட்டனர்! இதுவே எங்கள் குல தெய்வக் கோயில்!
திடீரென்று ஓர் உண்மை உறைத்தது கிராண்ட்டுக்கு
தூரி கோவில்- அது ஆற்றின் மையத்திலுள்ள திட்டின் கீழே இருக்கிறதா என்ன?
ஆம்- தப்பியோடி வந்த எங்கள் முதாதையர்களுக்கு புகலிடம் தந்தது அதுதான்!
தக்ஸ் இனத்தலரின் தலைமை பூசாரியான ஷெரீபா கண்களில் கொலைவெறி மினிர கிராண்ட்டை நெருங்கினுன்-
கோவிலை தரைமட்டமாக்கவிருந்தது உன் பாலம் கட்டும் பணி. அந்த தவறுக்காக உன தொழிலாளிகள் சிலர் ஏற்கனவே போய்ச சேர்ந்த இடத்திற்கு உன்னை அனுப்பி வைக்கப் போகிறேன்!
இதற்கிடையே கிராண்ட் நின்றிருந்த இடத்தை வந்தடைந்தனர் சில்ட்டனும், அவன் அழைத்து வந்த தொழிலாளிகளும்-
எஞ்ஜினீயர் லாரை எங்கே காணோம்?
கானே அவர் பின்தொடர்ந்து சென்றிருக்க மாட்டார் என்பது நிச்சயம்!
நீர்வீழ்ச்சியின் அருகே நெருங்கி வந்த தொழிலாளிகள் அதன உள்ளே நுழைய பயந்தனர்-
ஆபத்து ஏதுமிராது- இதோ நான் போகிறேன் முதலில்!
நீர்வீழ்ச்சியின் பின்னே தைரியமாக அந்த இளைஞன் முன்னேறிச் செல்வதை வியப்போடு பார்த்தனர் அந்த தொழிலாளிகள்-
ஆமாம்- ஆபத்தில்லைதான்! வாருங்கள் நாமும் பினதொடர்ந்து செல்வோம்!


ஒருவரை தொடர்ந்து ஒருவராக எல்லோரும் மறுபக்கம் சென்றடைந்தனர்-
அட-
சீக்கிரம்- இந்தப் பக்கமாக வாருங்கள்!
மிகுந்த எச்சரிக்கையோடு ஓசை எழுப்பாமல் முன்னேறினர்-
நீண்டு சொண்டே போகிறதே- முடிவே இல்லாமல்!
அந்த குகை கீழ் நோக்கிச் சென்றது. உள்ளே மங்கலான வெளிச்சம் பரவியிருந்தது-
மேலும் முப்பதடி தூரம் நடந்த பின் எதிரே விரிந்த அந்த காட்சி-
உன் நேரம் வந்து விட்டது வெள்ளையனே! தேவதை உன்னை ஏற்றுக் கொள்ளத் தயாராகி விட்டது போல் புன்னகை செய்வதைப் பார்!



அந்த கொடியனின் கையிலிருநத சால்வை கிராண்ட்டின் கழுத்தை சுற்றிக் கொண்டு இறுக்கத் தொடங்கியது.
பலி! பலி!
திடீரென்று துப்பாக்கி முழங்கியது.
அஹ்!
டுமீல்!
ஷெரீபா வெட்டுண்ட மரம் போல சரிந்தான். தொழிலாளிகள் ஆவேசமாகப் பாய்ந்து அங்கிருந்த கயவர்களை அடித்து நொறுக்கினர்.
நம் பாஸை கொல்ல முயன்ற இந்த கொடியவர்களை கொன்றாலும் பாதகமில்லை!
ஈவு இரக்கமின்றி அனைவரும் கொன்று குவிக்கப்பட்டனர். தக்ஸ் இனம் பூண்டோடு களையப்பட்டுவிட்டது.
மீந்து நின்ற கடைசி நபர் கிராண்ட்டை நெருங்கிய போது சில்ட்டனின் துப்பாக்கி மறுபடியும் முழங்கியது.







பிரகாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பாக லயன் காமிக்ஸை வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன், முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த. பெ. எண்: 374, சிவகாசி-626 123.
போன்: 21159. அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி.
வெளியீடு எண்: 52.



கானகத்தில் கண்ணாமூச்சி!
இன்று மலர்!
ரூ. 2-50